Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 04 ஹிஜ்ரி 1428 ரம்ழான் 17 (21.10.2005) வெள்ளிக்கிழமை இதழ்:21



அசல் 22 கரட் தங்க நகைகளையும்,
ஓடர் நகைகளையும் குறித்த நேரத்தில்
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள
கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P. : 021 222 5987

# பேச்சுக்கான இடத்தை தெரிவு செய்யும் புறாவ் ஹொவ்டேயின் முயற்சி தோல்வி!

## இலங்கை அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு —

போர் நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பேச்சுக்களை நடத்தும் இடம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடனும், இலங்கை அரசுடனும் பேச்சு நடத்துவதற்காக கொழும்பு வந்த நோர்வேயின் விசேட தூது வர் மேஜர் ஜெனரல் ட்றொன் புறாவ் ஹொவ் டேயின் பயணத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லையென, இலங்கை அரசாங்கம் நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, அரசாங்கத்தின் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கான இடத்தைத் தெரிவு செய்வதற்காக 8 நாள் விஜயமாக கொழும்பு வந்த நோர்வேயின் விசேட தூதுவர் - இலங்கை அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சுக்களை நடத்தினார்.

விடுதலைப் புலிகளுடனான நோர்வே தூதுவரின் சந்திப்பில் - கிளிநொச்சியில் அல்லது நடுநிலையான நாடொன்றில் பேச்சு நடத்துவதென்ற தமது நிலைப்பாட்டில் புலிகள் உறுதியாக உள்ளதாக தூதுவர் அரசிடம் தெரிவித்தார். எனவே, தற்போதைய முட்டுக்கட்டையான நிலையை நோர்வே தூதுவரின் பயணத்தால் அகற்றமுடியாமல் போய்விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# புலிகளின் பகுதியில் வேவு விமானம்!

## போர்நிறுத்தத்தை மீறும் செயல்!

### வவுனியா அரசியற் பொறுப்பாளர் ஞானம்

வவுனியா —

போர்நிறுத்த உடன்படிக்கை தற்போது அமுலிலுள்ள நிலையில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் படையினரின் வேவு விமானம் உளவு நடவடிக்கையில் ஈடுபட்டமை போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் என விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் புளியங்குளத்தில் அமைந்துள்ள வவுனியா மாவட்டஅரசியற்துறை செயலகத்தில் கண்காணிப்புக்குழுவினருடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாகிய கனகராயன்குளப் பிரதேசத்திலுள்ள கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம், கற்கிடங்கு ஆகிய கிராமங்களுக்கிடையிலுள்ள காட்டுப் பகுதியிலேயே இந்தஆளில்லாத வேவுவிமானம் விழுந்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த மீறல் இல்லையாம்!

### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

கொழும்பு —

ஆளில்லா விமானத்தை பயிற்சி நடவடிக்கைக்காக ஏவியது போர்நிறுத்த மீறல் அல்லவென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இறையாண்மையுள்ள அரசாங்கத்தின் வான் பரப்பில்தான் இந்த விமானம் பறந்தது. வான், தரை, கடல் மார்க்கங்களை பாதுகாக்கவேண்டியது படையினரது கடமையாகும். இந்த விமானம் குண்டு வீசுவதற்காக அனுப்பப்படவில்லை. வழமையான பயிற்சி நடவடிக்கைக்காகவே அனுப்பிவைக்கப்பட்டதெனத் தெரிவித்தார்.

இதேவேளை - காணாமற்போனதாகக் கூறப்பட்ட இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஆளில்லாத வேவு விமானம் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வீழ்ந்துள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதுவர்

## தமிழ் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை

## மகிந்தவுக்காக பிரசாரம்:

## அமெரிக்கத் தூதுவர் திருமலைக்கு விஜயம்!

கொழும்பு

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட் ஒருநாள் பயணமாக நேற்று முன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்தார்

அங்கு , இராணுவத் தளபதிகள் மற்றும் திருமலை மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரை இவர் சந்தித்து மாவட்டத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலை தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இராணுவத்தினருடனான சந்திப்பில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை சீர்குலைக்க முயலும் தேசவிரோத சக்திகள்!

### மத்திய கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியம் கண்டனம்!

யாழ்ப்பாணம்

யாழ்.மத்திய கல்லூரியின் அதிபர் க.இராசதுரையின் கொலைச் சம்பவத்தை தேசவிரோதிகள் தமது அரசியல் இலாபங்களுக்காகப் பயன்படுத்த தொடர்ந்து முயற்சி செய்து வருவதை கண்டிப்பதுடன், இவர்களின் இந்தச் செயற்பாட்டை மாணவர்கள் பொருட்படுத்தாது தமது கல்விச் செயற்பாட்டை வழமைபோல் தொடர்ந்தும் மேற்கொள்ளுமாறும் யாழ்.மத்தியகல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அதிபரின் மரணச்சடங்கில் ஆயுதப்படைகளின் பாதுகாப்புடன் கலந்துகொண்ட ஈ.பி.டி.பியினர் உயர்தர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவுக்காக பிரசாரம்: தொண்டராசிரியரிடம் ஈ.பி.டி.பி வலியுறுத்தல்!

யாழ்ப்பாணம்

நிரந்தர நியமனம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எனவே அது தொடர்பாக கலந்துரையாட வருமாறும் அழைக்கப்பட்ட தொண்டராசிரியர்களிடம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு ஈ.பி.டி.பியினர் வலியுறுத்தியுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பஹ்ரெய்னில் இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாண இளைஞர் உயிரிழப்பு!

கொழும்பு

பஹ்ரெய்ன் நாட்டு சீமெந்து தொழிற்சாலையில் இடம்பெற்ற விபத்தொன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்தின்போது சிவகுமார் (வயது 25) என்றஇளைஞரே உயிரிழந்தவராவார்.

பஹ்ரெய்ன் நாட்டின் சல்மாபாத்தில் உள்ள டெல்மான் ரெடி மிக்ஸ்ட் கொங்கிரீட் என்ற நிறுவனத்தில் கடந்த 3 ஆண்டுகளாக இவர் பணியாற்றிவந்தார்.

சம்பவ நாளன்று சீமெண்ட் கலவை இயந்திரத்தின் உள்ளே இறங்கி துப்பரவுப் பணிகளை செய்துகொண்டிருந்தபோது

மற்றொரு ஊழியர் இயந்திரத்துக்குள் சிவகுமார் இருப்பதை அறியாமலேயே அந்த இயந்திரத்திரத்தை இயக்கினார். இதில் படுகாயமடைந்த சிவகுமார் சல்மானியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தலை மற்றும் உடலில் படுகாயங்களுடன் சிகிச்சைக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண தமிழ் பெண் ஒருவர் ஜேர்மனியில் அடித்துக் கொலை!

### சந்தேகத்தில் கணவர் கைது!

கொழும்பு

ஜேர்மனியில் வசித்து வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாக ஜேர்மன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று ஜேர்மனியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 47 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயான செல்வக்குமார் மோகனாம்பிகை என்ற பெண்ணே அடித்துக் கொலை செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த செவ்வாய் அன்று கொலை செய்யப்பட்ட மேற்படி பெண்ணின் வீட்டிற்கு ஜேர்மன் நாட்டவர் ஒருவர் சென்ற சமயம், அவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாகக் காணப்பட்டதுடன் பெண்ணின் பிள்ளையொன்றும் படுகாயமடைந்த நிலையில் இருப்பதையும் அவதானித்த அவர், ஜேர்மன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

EXPOAIR

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



## விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்களை திறக்கவும்

யாழ்ப்பாணம் —

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகை தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக நிலையங்களையும் நாளை தொடக்கம் அடுத்த மாதம் முதலாம் திகதி வரை சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமறை தினங்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என யாழ். வணிகர்கழகம் அறிவித்துள்ளது.

விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப் படவேண்டுமெனவும், முதலாம் திகதிக்கு பின் ஞாயிறு, போயா, வர்த்தக விடுமுறை தினங்களிலும் வர்த்தக நிலையங்களை மூடி, வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கி சகல வர்த்தகர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

## பிரத்தியேக வகுப்பு ஆரம்பம்

மத்திய - மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் அனுசரணையுடன் வார இறுதி நாட்களில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றுவந்த பிரத்தியேக ஆங்கில வகுப்புகள் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மீளவும் நடைபெறவுள்ளது. மேற்படி வகுப்பில் பற்குபற்றிய அனைவரும் தவறாது பங்குபற்றுமாறு மத்திய மாகாண அரசு முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் தலைவர் இரத்தினசிங்கம் தெரிவித்தார்.


**உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு**

**வடக்கு - கிழக்கு மாகாண சபை**

**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் (நீகோட்)**

**நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி**

**ஆஅவ கடன் இல:- 2084 - சிறீ (எஸ்எவ்)**

# கேள்வி அறிவித்தல் இல: 57

1. வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் (NECORD - Ext) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக் கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னால் தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| NEP/NECORD - Ext/AG/01 | வவுனியா, விவசாய போதனா சாலையில் விரிவுரை மண்டபம், அலுவலர் விடுதி அமைத்தல் மற்றும் அலுவலகம் புனர்நிர்மாணித்தல் | M4 கட்டடம் | 255,900/= |
| VA/NECORD - Ext/ID/01 | வவுனியாவில் கலாசார மண்டபம் அமைத்தல் | M4 கட்டடம் | 305,000/= |
| NEP/NECORD - Ext/ID/01&02 | திருகோணமலை, வரோதயநகரில் இரண்டு, மூன்று மாடி அலுவலர் விடுதி அமைத்தல் | M4 கட்டடம் | 307,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள் ஆவர்.

I. நர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (ICTAD டுடன் M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தகாரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன், ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. ஆர்வமுள்ள, தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி:- 026 – 2227434. ∴பக்ஸ்:– 026 – 2227401. இணையதள முகவரி:- www.necord.org ஈமெயில்:- necord@sltnet.lk)
6. கேள்வி ஆவணங்களை 21.10.2005 இலிருந்து 07.11.2005 வரை, காலை 9.30 இலிருந்து, மாலை 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 2,000/– ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்டகேள்விச் சபை, "நீகோட்", 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு, 14.11.2005 காலை 11.30மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
9. முன்கூட்டியே கேள்விகோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 07.11.2005 ஆம் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக மாட்டார்.

**ந. லங்காநேசன்,**
**தலைவர், கேள்விச்சபை,**
**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம்.**
**55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை.**

(C/4738)


## வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பகுதி தனங்களப்பில் மக்களிடம் கையளிப்பு

சாவகச்சேரி—

தனங்களப்பில் வெடிபொருள் அகற்றப்பட்ட 1,859, 875 சதுர மீற்றர் வயல் நிலப்பிரதேசம் (450 ஏக்கர்) இன்று காலை 11 மணிக்கு பொதுமக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்படவுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் வெடிபொருள் அகற்றலில் ஈடுபட்ட -இராணுவ மிதிவெடி அகற்றும் பிரிவினரால் இந்தப் பகுதியில் இருந்து 77 வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, தனங்களப்பு - சாவகச்சேரி வீதிக்கு மேற்காக உள்ள இந்தப் பகுதியில் மிதிவெடிப் பிரதேசங்களாக இனங்காணப்பட்டு, இதுவரை மிதிவெடி அகற்றப்படாத பகுதிகள் வேலியிடப்பட்டு மிதிவெடிக் குறியீடுகள் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் கடந்த வருடம் நவம்பரில் வெடிபொருள் அகற்றல் ஆரம்பிக்கப்பட்டு கடந்தமாதமே நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## போதனா வைத்தியசாலை படுகொலையின் 18 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்.—

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையிலிருந்தவேளை இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 21 ஊழியர்களின் 18 ஆவது ஆண்டு நிறைவுநாள் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ரவிராஜ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதன் போது படுகொலை செய்யப்பட்ட வைத்தியர்களான ஏ.சிவபாதசுந்தரம், கே.பரிமேலழகர், கே.கணேசரட்ணம் ஆகியோர் உள்ளிட்ட 21 பேரின் திருவுருவப் படத்துக்கு அஞ்சலி செலுத்தப்படும். அத்துடன், வைத்தியசாலை சுழலில் அமைந்துள்ள ஆலயத்தில் விசேட பூசைகள் நடைபெறவுள்ளது.

அந்த நினைவு தின நிகழ்வில் வைத்தியர்கள், தாதிகள், ஊழியர்கள், சிற்றூழியர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## பயிற்சி பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் —

யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சி நெறி, தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என்றும், பயிற்சி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.


**சுன்னாகம் நாகம்ஸ்**

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு மூன்றாவது ஜனத்திரள் வாரமாக

ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல், கலாபவன்மணி, நடித்த

**மழை**



காட்சிகள்:-11.00,3.00,7.00, (பழையநேரம்)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த

**சாணக்கியா**

காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

**ராஜா** யாழ்ப்பாணம்

மூன்றாவது வெற்றி வாரமாக சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த

**கஜினி**



ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்

காட்சிகள்:-10.30,2.30, 6.30, மட்டும் (பு.நேரம்)

**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு!

பார்த்தீபன், லட்சுமிராய், வடிவேல் மற்றும் பலர் நடித்த

**குண்டக்க மண்டக்க...**

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

ஆர்ஜா, சோனியா அகர்வால் மற்றும் பலர் நடித்த

**ஒரு கல்லூரியின் கதை**

காட்சிகள்:-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

புத்தம் புதிய **DAIDO** BRAND NEW

100 CC.4.GERA



0112 341580, 0112 341581

"வாசியுங்கள் அகவிழி திறக்கும்"

வாசிப்போம் வாசித்ததை யோசிப்போம்

ஆசிரியர்களுக்கான மாத இதழ் **அகவிழி** ஆசிரியத்துவ நோக்கு...

AHAVILI, 3, Torrington Avenue, Colombo - 7, Sri Lanka.

T.P. 011- 2506272, E-Mail:ahavili@viluthu.org

(C/4683)


*அஸ்ஸலாமு அலைக்கும்*

## இவருக்கு உதவுங்கள்



முஹம்மது ரசீத்

புத்தளத்தைச் சேர்ந்த N.M.A.லதீப் என்பவரின் மகன் முஹம்மது ரசீத் என்பவர் சிறுநீரக (கிட்னி) நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். இவரை சத்திரசிகிச்சை மூலமே குணப்படுத்த வேண்டியுள்ளது. அதற்குரிய பண வசதி இல்லாத காரணத்தினால் தங்களால் இயன்ற உதவியை வழங்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்


*வஸ்ஸலாம்*

**வங்கிக் கணக்கிலக்கம்:**
மக்கள் வங்கி - 207-061905-8
புத்தளம் கிளை.

இல.30/5, கெனல் வீதி,
நூர் மஸ்ஜித் றோட்,
புத்தளம்.

# மகிந்தவின் தேர்தல் அறிக்கைபற்றி தனக்கு எதுவுமே தெரியாதாம்!

## அனுரா பண்டாரநாயக்க கூறுகிறார்



கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை தனக்குக் காண்பிக்கப்படவில்லை. அதனால், அது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

தயார் செய்யும் முன்னரோ, அல்லது வெளியிட்ட பின்னரோ தனக்குக் காண்பிக்கப்படாத தேர்தல் அறிக்கை குறித்து எதனையும் தற்போது தெரிவிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை என்று - மஹிந்தவின் தேர்தல் அறிக்கையான 'மஹிந்த சிந்தனைகள்' குறித்து கருத்துத் தெரிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் அறிக்கையா என்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளரான தனக்கு தெரியாதென்றும் அவர் மேலும் கூறினார்.

இந்தத் தேர்தல் அறிக்கை வெளியீட்டு நிகழ்வில் அனுரா பண்டாரநாயக்க கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்தினரின் உளவு நடவடிக்கை போர்நிறுத்த உடன்பாட்டிற்கு முரணானது

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

கொழும்பு—

இராணுவத்தின் உளவு நடவடிக்கையானது போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முரணானது என்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ்டொட்டிர் கருத்துத் தெரிவிக்கையில் -

இராணுவத்தின் ஆளில்லா வேவு விமானம் விழுந்து நொறுங்கியது குறித்து எமக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தகவல் தெரிவித்தனர். இலங்கை இராணுவமும் தங்களது ஆளில்லா விமானம் காணாமற்போனதாகத் தெரிவித்தது.

இந்த ஆளில்லா விமானம் வேவுப் பணிகளுக்காக இராணுவத்தால் பயன்படுத்தப்படுவதாக தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றம்சாட்டியிருந்தனர். ஆனால், இலங்கை அரசாங்கம் இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்துவிட்டது.

இராணுவத்தின் உளவு நடவடிக்கையானது போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முரணானது. விமானம் விழுந்து நொறுங்கியுள்ளது இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம்.

ஏற்கனவே, உளவு விமானம் தொடர்பாக 6-7 முறை விடுதலைப் புலிகள் முறைப்பாடுகள் செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை உத்தியோகபூர்வமாக முறைப்பாடுகள் செய்யவில்லை. இருப்பினும் முறைப்பாடு செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது எனத் தெரிவித்தார்.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விமானம் விழுந்து நொறுங்கியதாக செய்தி ஸ்தாபனங்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேலியத் தயாரிப்பான இந்த உளவு விமானம் 3 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியானது எனத் தெரியவந்துள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்தபின்பு விமானப் படைக்குச் சொந்தமான விமானம், வடக்கு - கிழக்கில் விழுந்து நொறுங்கியமை இதுவே முதல் முறையாகும்.

# ஜனாதிபதி தேர்தல் முடியும்வரை புதிதாக ஆட்சேர்ப்பு இல்லை!

கொழும்பு—

அரச சேவைகளில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ஆட்சேர்ப்புகள் தவிர, ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை வேறு ஆட்சேர்ப்புக்கள் எதனையும் மேற்கொள்வதில்லையென்று நிதித் திட்டமிடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது சேவையில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதில்லை என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிதாக யாரையும் சேர்த்துக் கொள்ள வேண்டாமென்றும், பதவி உயர்வுகளை வழங்க வேண்டாமென்றும் அனைத்து அமைச்சு செயலாளர்களுக்கும், மாகாண சபை செயலாளர்களுக்கும், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கும் - நிதியமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

தேர்தலுக்கென வேட்புமனுத் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் தொடங்கப்பட்ட வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புகள், அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுக்களின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புகள் இந்த தீர்மானத்திற்குள் உள்ளடங்காது என்றும் நிதியமைச்சின் செயலாளர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# காணாமற்போன சிங்கள சாரதியை தேடும் பணியில் தமிழீழ காவல்துறை!

திருகோணமலை—

தமிழீழ நிர்வாகப் பகுதியான திருகோணமலை, சேருவில பிரதேசத்தில் காணாமற்போன சிங்களவரான உழவு இயந்திரச் சாரதியை தமிழீழ காவல்துறையினர் தேடி வருகின்றனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இந்தச் சாரதியின் புகைப்படத்துடன் அவர் குறித்த விபரங்களை தமிழீழ காவல்துறையிடம் கையளித்து விசாரணையை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதையடுத்து இந்தத் தேடுதல் நடவடிக்கையை தமிழீழ காவல்துறை மேற்கொண்டுவருகிறது.

கடந்த ஒக்ரோபர் 5 ஆம் திகதிமுதல் ரஞ்சித் ஜயசிறீ (வயது 40) என்ற இவர் சேருவில பிரதேசத்தில் காணாமற்போயுள்ளார். சுனாமி மீளமைப்புப் பொருட்களை ஏற்றிவந்தபோது அவரது உதவியாளருடன் காணாமற்போனதாகக் கூறப்படுகிறது.

இவர் காணாமற்போனமை தொடர்பாக கடந்த சனிக்கிழமை சிங்களவர்கள் திருகோணமலையில் முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைத்து விடுத்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ட்ஸ்டொட்டிர் கூறுகையில் -

காணாமற்போன சிங்களவரின் குடும்பத்தினருடன் தொடர்பில் இருந்துவருகிறோம். தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் சமாதானச் செயலகத்திடம் இது தொடர்பிலான தகவல்கள் கையளிக்கப்பட்டுள்ளன என்றார்.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மட்டக்களப்பில் 30 வீத வாக்காளர்!

கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ள மொத்த வாக்காளர்களில் 25.4 சதவீதமானோர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வசிப்பதாகத் தேர்தல் திணைக்களம் மதிப்பீடு செய்துள்ளது.

இந்த மாவட்டத்திலுள்ள 3 தொகுதிகளிலும் 3 லட்சத்து 18 ஆயிரத்து 728 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

இவர்களில் 80 ஆயிரத்து 443 வாக்காளர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வசிக்கின்றனர்.

தேர்தலின்போது 354 வாக்குச் சாவடிகள் இந்த 3 தொகுதிகளிலும் அமைக்கின்றபோதிலும், விடுதலைப்புலிகளின் பகுதியிலுள்ள 89 வாக்குச் சாவடிகளும் வழமைபோல் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் கொத்தணி அடிப்படையில் 12 இடங்களில் அமைக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு தொகுதியில் பதிவுசெய்துள்ள 1 லட்சத்து 47 ஆயிரத்து 979 வாக்காளர்களில் 16.82 வீதமான வாக்காளர்கள் அதாவது, 24 ஆயிரத்து 896 வாக்காளர்கள் விடுதலைப் புலிகளின் பகுதியில் உள்ளனர்.

வழமையான 162 வாக்குச் சாவடிகளில் விடுதலைப் புலிகளின் பகுதிக்குரிய 27 வாக்களிப்பு நிலையங்களும் இரண்டு இடங்களில் கொத்தணிகளாக அமைகின்றன.

பட்டிருப்புத் தொகுதியில் பதிவுசெய்துள்ள 79 ஆயிரத்து 339 வாக்காளர்களில் 46 வீதமான வாக்காளர்கள் அதாவது 36 ஆயிரத்து 616 வாக்காளர்கள் விடுதலைப்புலிகளின் பகுதியில் உள்ளனர்.

வழமையான 83 வாக்குச் சாவடிகளில் விடுதலைப் புலிகளின் பகுதிக்குரிய 39 வாக்களிப்பு நிலையங்களும் 4 இடங்களில் கொத்தணிகளாக அமைகின்றன.

கல்குடாத் தொகுதியில் 91 ஆயிரத்து 410 வாக்காளர்களில் 20.71 வீதமான வாக்காளர்கள் அதாவது 18 ஆயிரத்து 931 வாக்காளர்கள் விடுதலைப் புலிகளின் பகுதியில் உள்ளனர்.

வழமையான 86 வாக்குச் சாவடிகளில் விடுதலைப் புலிகளின் பகுதிக்குரிய 23 வாக்களிப்பு நிலையங்களும் 6 கொத்தணிகளாக அமைகின்றன.

இந்த வாக்காளர்களில் விடுதலைப்புலிகளின் பகுதிகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைவரும் தமிழர்கள். அதாவது மாவட்ட ரீதியான மொத்த தமிழ் வாக்காளர்களில் 29-30 சதவீதமாகும்.

இந்த வாக்காளர்கள் இராணுவச் சோதனைச் சாவடிகள் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள கொத்தணி வாக்குச் சாவடிகளுக்கு பொதிகள் எதுவுமின்றி வரும்பொழுது எவ்வித சோதனையுமின்றி செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என, படைப்பிரிவுகளுக்குப் பொறுப்பான கட்டளை அதிகாரிகளுக்கும் மாவட்ட தேர்தல் தெரிவு அத்தாட்சி அலுவலருக்கும் இடையில் எழுத்துமூலம் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் பயணம் செய்யும் விசேட வாகனங்கள் கொத்தணி வாக்குச் சாவடிகளிலிருந்து 500 மீற்றர்வரை நேரடியாகச் செல்ல அனுமதிக்கப்படும்.

அனைத்து வாக்குச் சாவடிகளிலும் பொலிஸாரின் வழமையான கடமைக்கு மேலதிகமாக இராணுவம் மற்றும் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என -

தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் படை அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்பில் முடிவெடுக்கப்பட்டது.

# வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் குறித்து தேர்தல் திணைக்களம் விரைவில் முடிவு

கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை வரவழைப்பது தொடர்பாக இதுவரை உறுதியானதொரு முடிவை தேர்தல் திணைக்களம் எடுக்கவில்லை.

தேர்தலைக் கண்காணிப்பதற்காக வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை அழைக்குமாறு தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளரும் இதுவரை கோரிக்கை விடுக்கவில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் சொந்தச் செலவில் இலங்கைக்கு வந்து தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத் தயாராக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை பணியில் ஈடுபடுத்துமாறு, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்தால் மட்டுமே, வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தேர்தல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் அலுவலகங்களை அமைக்கவேண்டாம்!

## பவ்ரல் அமைப்பு கட்சிகளிடம் கோரிக்கை

கொழும்பு—

வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் தேர்தல் அலுவலகங்களை அமைக்க வேண்டாம் என்று, தேர்தலுக்கான சுயாதீன கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் - அரசியல் கட்சிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த இடங்களில் அலுவலகங்கள் அமைக்கப்படுமாயின் வன்முறைகள் அதிகரிக்கலாம் என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு முன்னர் ஒரு தேர்தல் தொகுதியில் மாத்திரமே ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் தேர்தல் அலுவலகம் அமைக்க தேர்தல் ஆணையாளரால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும், தற்சமயம் வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதேசங்களில் வேட்பாளர்கள் தமது அலுவலகங்களை அமைக்கமுடியும் எனப் புதிய அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், 13 வேட்பாளர்களும் வாக்குச்சாவடிகளுக்கு ஏற்ப தேர்தல் அலுவலகங்களை அமைப்பார்களானால், நாடு முழுவதும் 10 ஆயிரத்து 446 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும்போது மொத்தமாக 13 வேட்பாளர்களும் - 1 லட்சத்து 35 ஆயிரத்து 798 அலுவலகங்கள் அமைக்கும் நிலை ஏற்படும். இது பாரியயளவில் நடைமுறைச் சிக்கலை ஏற்படுத்தும் என பவ்ரல் அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. (01)

# சட்டத்தரணி வேடமிட்ட பெண்ணுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை

கொழும்பு—

கொழும்பு நீதிமன்றத்தில் சட்டத்தரணியைப் போன்று வேடமிட்டு நடமாடியபோது கைதுசெய்யப்பட்ட பெண்ணுக்கு 12 மாதகால ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதிபதி குசலா சரோஜினி வீரவர்த்தன இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இதுதவிர 1,500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதத்தை அறவிட்ட பின்னர் சந்தேக நபரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்ட நீதிபதி, சந்தேக நபரின் நன்னடத்தைக் காலத்தையும் விளக்கமறியல் காலத்தையும் கவனத்தில் எடுத்து இந்தத் தண்டனையை விதித்துள்ளார்.

இதுபோன்ற குற்றச் செயல்களில் அவர் மீண்டும் ஈடுபட்டால் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் சந்தேக நபரை நீதிபதி எச்சரித்துள்ளார்.

சந்தேக நபரான இந்தத் தமிழ்ப் பெண்ணிடமிருந்து 3 அடையாள அட்டைகள் கைப்பற்றப்பட்டிருந்தன. அது குறித்து விசாரணைகளை மேற்கொண்டதில் அவர் மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

# கடன் அட்டை மோசடி; இருவருக்கு விளக்கமறியல்

கொழும்பு—

இங்கிலாந்து தனியார் வங்கிகள் சிலவற்றின் கடன் அட்டைகளை மோசடி செய்து 10 லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதி வாய்ந்த பொருட்களை கொள்வனவுசெய்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட இரு சந்தேக நபர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# பாகிஸ்தான் வரும் இங்கிலாந்தை சுழற்பந்து வீச்சால் வீழ்த்துவோம்

## இன்சமாம் உல்-ஹக் சூளுரை



லண்டன் —

பாகிஸ்தானுக்கு வருகைதரும் இங்கிலாந்து அணியை சுழற்பந்து வீச்சின் மூலம் வீழ்த்தத் திட்டமிட்டிருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் இன்சமாம் உல்-ஹக் தெரிவித்தார்.

மேலும் - இந்தப்போட்டி பாகிஸ்தானில் நடைபெறவிருப்பதால், இதற்கேற்றாற்போல் ஆடுகளங்களை தயார் செய்யவும் முடிவு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

லண்டனிலிருந்து வெளிவரும் டெலிகிரஸ் என்ற நாளிதழுக்கு அளித்துள்ள பேட்டியில் இன்சமாம் மேலும் தெரிவித்துள்ளதாவது -

பாகிஸ்தான் அணிக்குள்ள சாதகமான நிலைமை உள்நாட்டு ஆடுகளங்களாகும். கடந்த ஒரு வருடகாலமாக டனேஷ் கனேரியா முக்கிய சுழற்பந்து வீச்சாளராக இருந்துவருகிறார். அவருக்கு உதவும் வகையில் விக்கெட்டுக்களை தயார் செய்யவுள்ளோம்.

அடுத்தவாரம் பாகிஸ்தான் தேசிய அணிக்கும், ரெஸ்ட் ஒப் பாகிஸ்தான் அணிக்குமிடையேயான பயிற்சி ஆட்டத்திற்கு, முஸ்டாக் அகமட் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இதன்மூலம், ஆஷஸ் தொடரில் வெற்றிபெற்ற மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணிக்கு எதிரான உள்நாட்டுத் தொடரில், மூத்த லெக்ஸ்பின்னரான முஸ்டாக் அகமட் பங்குகொள்ளும் வாய்ப்பு உள்ளது.

முஸ்டாக்கிடம் ஏராளமான அனுபவம் உள்ளது. தற்போதுள்ள நெருக்கடியில் எந்த ஒரு வீரருக்கும் அணியில் நிச்சயம் இடமுண்டு என்று நான் கூறமுடியாது.

தற்போதைய நிலையில் 4 அல்லது 5 மாதகாலம் ஒரு வீரர் சர்வதேச போட்டிகளில் ஆடவில்லை என்றால், அவரது இடம் அணியில் உறுதியில்லை.


மேலும் இங்கிலாந்து அணி தற்போது வலுவான நிலையில் உள்ளது. எனவே அந்த அணியைத் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளவேண்டும். அணியில் உள்ள 11 வீரர்களும், அர்ப்பணிப்பு உணர்வுடன் ஆடினால்தான் இங்கிலாந்து அணியைச் சமாளிக்கமுடியும்.

அக்தர், மொகமட் சமி மற்றும் ஷேர் அகமட் ஆகியோர் முழு உடற்தகுதியுடன் அணியில் இடம்பெற்றால், அணியின் ஆரம்ப தாக்குதல் நன்றாக இருக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

விளையாட்டு

# துலிப் கிண்ண போட்டியில் அதிக ஓட்டங்கள் குவிப்பேன்

## கங்கூலி நம்பிக்கை தெரிவிப்பு



ராஜ்கோட் —

துலிப் கிண்ண கிரிக்கெட் போட்டி நேற்று குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் தொடங்கியது. இதில் காயம் காரணமாக இலங்கையுடனான போட்டியில் பங்கேற்கமுடியாமல் இருக்கும் கங்கூலி கிழக்கு மண்டல அணி சார்பில் விளையாடுகிறார். இவர் திறமையாக விளையாடினால், இலங்கை அணியுடன் நடைபெறவுள்ள கடைசி 5 ஒருநாள் போட்டிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்.

இதற்காக ராஜ்கோட் வந்துள்ள கங்கூலி நிருபர்களிடம் கூறியதாவது -

இப்போது என்னுடைய ஒரே குறிக்கோள் அதிகமாக ஓட்டங்களைக் குவிக்கவேண்டும் என்பது மட்டுமே. நான் சிறப்பாக விளையாடி எனது திறமையை நிரூபிப்பேன்.

இந்திய அணி மற்றும் கப்டன் பதவி பற்றி நான் எதையும் சொல்ல விரும்பவில்லை. நான் தொடர்ந்து கிரிக்கெட் விளையாட வேண்டும். வேறு எதையும் நான் நினைத்துப் பார்க்கவில்லையெனத் தெரிவித்தார்.

இதேவேளை, கங்கூலியின் காயம் குணமாகி மீண்டும் அவர் விளையாட தகுதிபெற்றிருப்பது குறித்து அவருக்கு சிகிச்சை அளித்த கொல்கத்தா டொக்ரர் கல்யாண் முகர்ஜி கூறியதாவது -

கங்கூலிக்கு ஏற்பட்டிருந்தது சாதாரண காயம்தான். ஆரம்பத்திலேயே இதைக் கண்டுபிடித்துவிட்டதால், எளிதாகக் குணமாக்கமுடிந்தது. அமெரிக்காவில் இருந்து மருந்தை வரவழைத்துக் கொடுத்து குணப்படுத்தினேன்.

டெண்டுல்கருக்கு ஏற்பட்டதுபோல இது மோசமான காயமல்ல. டெண்டுல்கருக்கு 3ஆம் நிலைக் காயம். கங்கூலிக்கு ஏற்பட்டிருந்தது முதல் நிலைக் காயம். எனவே, இதனைக் குணமாக்குவதற்கு சிரமம் எதுவும் இல்லை. அவர் இனி வழக்கம்போல விளையாடலாமெனத் தெரிவித்தார்.

# அவுஸ்ரேலிய பயிற்சியாளரிடம் சானியா மிர்சா பயிற்சி பெறுவார்



புதுடெல்கி —

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பிரபல பயிற்சியாளர் டோனி ரோச்சிடம் சானியா மிர்சா பயிற்சி பெறவுள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த இளம் ரெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா கடந்த அவுஸ்ரேலிய ஓபன் போட்டியில் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியதன் மூலம் உலக ரசிகர்களின் பார்வையை தன் பக்கம் திருப்பியுள்ளார். தற்போது உலக தரவரிசையில் 32 ஆவது இடத்தில் உள்ளார்.

ஆக்ரோஷமான ஆட்டத்தின் மூலம் அரிய வெற்றிகளைப் பெற்ற சானியா - அவ்வப்போது நிலையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்தி மோசமான தோல்வியையும் சந்தித்து வருகிறார்.


சானியா தனது ஆட்டத் தரத்தை மேம்படுத்த புதிய பயிற்சியாளரை நாடியிருக்கிறார்.

உலகின் முதன்நிலை வீரரான ரோஜர் பெடரருக்கு பயிற்சியளித்த அவுஸ்ரேலிய நாட்டவரான டோனி ரோச்சிடம் அவர் பயிற்சி பெறவுள்ளார்.

ரோச்சிடம் சானியா மிர்சா டிசெம்பர் மாதத்தில் தனது பயிற்சியைத் தொடங்கவுள்ளார். அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறும் அவுஸ்ரேலிய ஓபன் போட்டிக்குத் தயாராகும் விதமாக இந்தப் பயிற்சியை அவர் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தத் தகவலை சானியாவின் தந்தை இம்ரான் மிர்சா தெரிவித்தார். டேவிஸ் கிண்ண ரெனிஸ் முன்னாள் வீரர் ஜெய்தீப் முகர்ஜி கேட்டுக் கொண்டதன் பேரில் ரோச் பயிற்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதாகவும் அவர் கூறினார்.

# ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் கில்கிறிஸ்ட் முதலிடத்தை பிடித்தார்



டுபாய் —

ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் துடுப்பாட்ட வரிசையில் அவுஸ்ரேலியாவின் விக்கெட் காப்பாளர் கில்கிறிஸ்ட் முதலிடத்தைப் பிடித்தார்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் வீரர்களின் வரிசைப் பட்டியல் ஐ.சி.சியால் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி ஒருநாள் போட்டியின் துடுப்பாட்ட வரிசைப் பட்டியலில் அவுஸ்ரேலிய விக்கெட் காப்பாளரும், சகலதுறை வீரருமான கில்கிறிஸ்ட் முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவர் 810 புள்ளிகளைப் பெற்று இந்த இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

றிக்கி பொண்டிங் (அவுஸ்ரேலியா), சிமித் (தென்னாபிரிக்கா), ட்ரெஸ் கொதிக் (இங்கிலாந்து), கைல் (மேற்கிந்தியத் தீவுகள்), யுகானா (பாகிஸ்தான்), ஜெயசூரிய (இலங்கை), இன்சமாம் (பாகிஸ்தான்), அத்தபத்து (இலங்கை), சங்கஹார (இலங்கை), ஆகியோர் முறையே 2 முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளனர். பந்து வீச்சில் அவுஸ்ரேலிய வீரர் மக்ரா முதலிடத்தில் உள்ளார்.

இதில் என்ன விசேடம் என்றால், இந்திய அணியில் பல நட்சத்திர வீரர்கள் இடம்பெற்றிருந்தும், அவர்களில்



ஒரு வீரர் கூட தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

டெஸ்ட் போட்டியின் துடுப்பாட்ட வரிசையில் - தென்னாபிரிக்க வீரர் கலிஸ் முதலிடத்தில் உள்ளார். இந்திய வீரர்கள் ராவிட் 4ஆவது இடத்தையும், ஷேவாக் 5ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். பந்துவீச்சில் அவுஸ்ரேலிய வீரர் மக்ரா முதலிடத்தில் உள்ளார். இந்திய வீரர் இர்பான் பதான் 10ஆவது இடத்தில் உள்ளார்.

# சொந்த மண்ணில் இந்திய அணியை வீழ்த்துவோம் என்கிறார் சங்கஹார!

கொழும்பு —

சொந்த மண்ணில் இந்திய அணியை வீழ்த்துவோம் என்று இலங்கை அணியின் விக்கெட் காப்பாளர் சங்கஹார தெரிவித்துள்ளார்.

அத்தபத்து தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் பயணம் செய்து 7 ஒருநாள் போட்டி மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் ஆடவுள்ளது. முதலில் இலங்கை அணி ஒருநாள் போட்டித் தொடரில் ஆடவுள்ளது.


இவ்விரு அணிகளிடையிலான முதல் ஒருநாள் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி நாக்பூரில் நடைபெறும். ஒருநாள் போட்டித் தொடர் முடிந்த பின்னர் இலங்கை அணி நாடு திரும்பும். பின்னர் மீண்டும் அந்த அணி நவம்பர் மாதம் இந்தியாவிற்குச் சென்று 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடவுள்ளது. இந்தநிலையில் ஒருநாள் போட்டித் தொடருக்கான இலங்கை அணி நேற்று இந்தியா சென்றது.

இந்த 7 ஒருநாள் போட்டி குறித்து இலங்கை அணியின் விக்கெட் காப்பாளரும், சகலதுறை ஆட்டக்காரருமான சங்கஹார நிருபர்களிடம் கூறியதாவது -

இந்திய அணி ஏற்கனவே பல சாதனைகளைப் படைத்துள்ளது. எனவே இந்தத் தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும். அனைத்து ஆட்டங்களிலும் வெற்றிபெறவேண்டும் என்பது எங்களது எண்ணமாகும். இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தவேண்டும்.

இலங்கை அணியின் ஆட்டம் முன்னேற்றப் பாதையில்தான் சென்று கொண்டு இருக்கிறது. இந்தியத் தொடரில் நானும் சிறப்பாக ஆட முயற்சி செய்வேன். இதற்காக நான் கடுமையான பயிற்சியில் ஈடுபட்டு வருகிறேனெனத் தெரிவித்தார்.

# ஜூரிச் ஓபன் ரெனிஸ் போட்டி; முதல் சுற்றில் டேனிலா வெற்றி



ஜூரிச் —

ஜூரிச் ஓபன் ரெனிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டமொன்றில் சுகியம்மாவை டேனிலா ஹண்டுசோவா தோற்கடித்தார்.

சுவிற்சர்லாந்தில் நடைபெற்றுவரும் இந்தப் போட்டியின் முதல் சுற்று ஆட்டமொன்றில் ஸ்லோவாக்கியா வீராங்கனை டேனிலா ஹண்டுசோவா - ஜப்பான் வீராங்கனை சுகியம்மாவை எதிர்த்தாடினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் முதல் செட்டை சுகியம்மா 6-1 என்ற கணக்கில் எளிதாகக் கைப்பற்றினார். முதல் செட்டை இழந்ததால் அடுத்த செட்களில் டேனிலா சுதாரித்துக்கொண்டு ஆடினார். இதற்கு அவருக்கு கைமேல் பலன் கிடைத்தது. இதனால் டேனிலா அடுத்த 2 செட்களையும் தனதாக்கிக் கொண்டார். இதில் 1-6, 7-5, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றைய ஆட்டங்களில் கத்தரினா (ஸ்லோவேனியா), நாதலி டெசி (பிரான்ஸ்), பதிஷிண்டர் (சுவிற்சர்லாந்து), அன்னா இவனோவிக், ஜெலீனா ஜாங்கோவிக் ஆகியோர் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

# பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிரிக்கெட் போட்டி மூலம் உதவமுயற்சி!

லாகூர் —

பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் அண்மையில் ஏற்பட்ட மோசமான பூகம்பத்தில் பெருமளவானோர் உயிரிழந்தும், காயமடைந்தும் உள்ளனர்.

இந்தநிலையில் இவர்களுக்கு உதவி புரியும் நோக்கில் பூகம்ப நிவாரண நிதி கிரிக்கெட் போட்டியை நடத்த ஆசிய கிரிக்கெட் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியாவும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹாரியார் கானும் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில், நல நிதிக்கான சர்வதேச போட்டி நடைபெறும் உத்தேச திகதிகள் குறித்து அடுத்த சில தினங்களில் அறிவிப்பு வரும் என்று ஷஹாரியார் கான் லாகூரில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சர்வதேச கிரிக்கெட் சபையும், பூகம்ப நிவாரணத்துக்கு நன்கொடை கொடுத்துள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் சபையும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையுடன் இணைந்து நிதி திரட்டித்தர முன்வந்துள்ளது. இந்த நோக்கில் லாகூரில் இரு நாட்டு அணிகளுக்குமிடையே நடைபெறவுள்ள முதல் ஒருநாள் போட்டியின் நுழைவுக் கட்டணத் தொகை முழுவதையும் நிவாரண நிதிக்கு அளிப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கிடையே பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் ரஷித் லத்தீப், தற்போதைய வீரர்கள் யூனிஸ் கான், சமி ஆகியோரும் தங்களது கிரிக்கெட் மட்டைகள், சட்டைகளை ஏலம் விட்டு, அதன் மூலம் கிடைத்த 65 லட்சம் ரூபாயை பாகிஸ்தான் பூகம்ப நிவாரணத்துக்கு வழங்கியுள்ளனர்.

# உதைபந்தாட்ட வீரர் கைது!

லண்டன் —

போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த உதைபந்தாட்ட வீரர் சிறில் புனோ ரொனால்டோ. இவர் இங்கிலாந்து கழகம் ஒன்றில் சேர்ந்து விளையாடி வந்தார். அவரும் மற்றைய 2 பேரும் சேர்ந்து ஹொட்டேலில் வைத்து ஒரு பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியதாகக் கூறப்பட்டது.

இது சம்பந்தமாக அவரை லண்டன் பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

### எரிபொருள் நிரப்பு நிலையத்தின்

# டீசல் பம்பியை மோதியது லோடர் ரக வாகனம்!




யாழ்ப்பாணம்—

யாழ்.பிரதான வீதியில் தண்ணீர்தாங்கிமுன்பாக அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் டீசல் பம்பியுடன் லோடர் ரக வாகனம் மோதியதில் பம்பி முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு டீசல் நிரப்புவதற்குச் சென்ற லோடர் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து டீசல் பம்பியுடன் மோதியதில் பம்பி முற்றாகச் சேதமடைந்து நிலத்தில் சரிந்து இயங்கமுடியாத நிலையில் உள்ளது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாக எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, குறிப்பிட்ட டீசல் பம்பியைச் சேதப்படுத்திய வாகனத்தின் சாரதி அதனைத் திருத்தம் செய்வதற்கு ஏற்படும் முழுச் செலவையும் தாம் பொறுப்பேற்பதாகத் தெரிவித்துள்ளார்.

# மண்டைதீவில் பொதுச்சந்தை அமைத்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்—

மண்டைதீவுப் பகுதியில் பொதுச் சந்தை ஒன்றை அமைத்துத் தருமாறு அந்தப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்டகாலமாக மண்டைதீவுப் பகுதியில் பொதுச் சந்தை ஒன்று இல்லாததால் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

மண்டைதீவுப் பகுதியில் உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாய உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கும், அன்றாடப் பாவனைக்குத் தேவையான மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்வதற்கும் யாழ்.நகருக்குச் சென்றுவரவேண்டியுள்ளதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதேவேளை, இந்தப்பகுதியில் அதிகமாக மக்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற போதும், பிடிக்கப்படுகின்ற மீன்களை இவர்கள் சநதைப்படுத்துவதற்கு யாழ்.நகருக்கு வர வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரின் அபிலாஷைகளை நசுக்கும் வகையிலேயே மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது!

## ரவிராஜ் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம்—

தமிழ் பேசும் மக்களுடைய உரிமைப் போராட்டத்தை முற்றாகப் புறக்கணித்து, தமிழ்மக்களுடைய அபிலாஷைகளை நசுக்குகின்ற செயற்பாடுகளை முன்னெடுக்கப்படுவதற்கு உகந்ததாகவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது என- யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ்பேசும் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் சொந்த நிலப்பரப்பில் சுயமாக வாழ வேண்டும் என்ற நோக்குடன் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற வேளையில் -

ஆளும் கட்சியால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனமானது தமிழ்பேசும் மக்களை பெரிதும் வியப்புக்குள்ளாக்கி இருக்கிறது. தமிழ்மக்களுடைய உரிமைப் போராட்டத்தைப் பேரினவாதத்தின் அரசியல் செயற்பாடுகள்மூலம் நசுக்க முனைகின்ற செயற்பாடாகவே அது அமைகின்றது.

சிங்களப் பேரினவாதிகள் சமாதான நிலையைக் கடந்து யுத்தம் என்ற நிலைக்குத் தமிழ் மக்களைத் தள்ளிவிட்டார்கள் என்பதையே, இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

கடந்த காலங்களில் தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைத் தொடர்ச்சியாக இழைப்பதற்குச் சிங்களப் பேரினவாதம் முனைந்து செயற்படுகின்றது.

தமிழ்பேசும் மக்கள் தமது சுதந்திரமான வாழ்வை வளப்படுத்துவதற்காக உரிமைக் குரல் கொடுத்துவருகின்ற இந்தக் காலகட்டத்தில் - சிங்களப் பேரினவாத சக்திகள் அத்தகைய செயற்பாடுகளை அடியோடு அழித்துவிடுவதற்காகத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறது என்ற உண்மையை சிங்களத் தலைவர்களால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பார்க்கின்றபோது தெரிகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊடகத்துறைக்காக தன்னையே அர்ப்பணித்து உயிர்துறந்த கொடையாளனே நிமலராஜன்!

## அவரது நினைவுதின நிகழ்வில் கலாநிதி சண்முகதாஸ்



யாழ்ப்பாணம்—

ஊடகத்துறைக்காகத் தன்னையே அர்ப்பணித்த கொடையாளன் நிமலராஜன் என்பதை எவராலும் மறந்துவிடமுடியாது என - யாழ்.ஊடகவியலாளர் பயிற்சிமைய இணைப்பாளர் கலாநிதி சண்முகதாஸ் தெரிவித்தார்.

இனந்தெரியாதோரால் அவரது வீட்டில் வைத்து 2000 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 5 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு நினைவுரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.ஊடகவளங்கள் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் -

இன்றைய காலகட்டத்தில் தமிழ் ஊடகத்துறை பெரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டிய ஒரு துறையாகவே இருக்கின்றது. தொடர்ச்சியாக தமிழ் ஊடகவியலாளர்களுக்குக் கொலை அச்சுறுத்தல்களும், மிரட்டல்களும் விடப்பட்ட வண்ணமே இருக்கின்றது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் தமிழ்மக்களுக்கு இராணுவத்தினரால் இழைக்கப்படுகின்ற அநீதிகளையும், எதிர்நோக்குகின்ற துன்ப துயரங்களையும் உடனுக்குடன் சர்வதேச உலகுக்கு வெளிக்காட்டிய துனிச்சலான பத்திரிகையாளன்.

இவரது இழப்பு தமிழ் ஊடகத்துறைக்கு மட்டுமல்ல, சர்வதேச ஊடகத்துறைக்கும் ஏற்பட்ட பாரிய இழப்பாகும். ஒரு பத்திரிகையாளன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குச் சான்றாகச் செயற்பட்டவர் நிமலராஜன் என்பதை எந்தவித ஐயமுமின்றிக் கூறலாம்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஊடகத்துறையில் இருக்கின்ற இளம் ஊடகவியலாளர்களை தகுந்தமுறையில் வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பு பத்திரிகைத்துறையில் நீண்டகால அனுபவம் கொண்டவர்களுடையதாகும்.

மறைந்த ஊடகவியலாளர் நிமலராஜனைப் போன்று துடிப்புமிக்கவர்களாக இளம் ஊடகவியலாளர்கள் வளர்ந்துவர வேண்டும்என்பதே எமது எல்லோரதும் எதிர்பார்ப்பாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : பா.யதுஜா
முகவரி : இத்தாவில், பளை.

### அகவை இரண்டு



பெயர் : ஜீ.சுருதிகா
முகவரி : இரணைமடுச் சந்தி.

### அகவை மூன்று



பெயர் : கி.சுகிர்தா
முகவரி : பண்டத்தரிப்பு.

### அகவை ஒன்பது



பெயர் : சி.சுகன்யா
முகவரி : அல்வாய் தெந்கு

### வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ---------------
முகவரி : ---------------
பிறந்த ஆண்டு : ---------------

கூப்பன்களை பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------
பெற்றோர் ஒப்பம்

# கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்; 75 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

கொழும்பு—

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் ஸ்தாபிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவுபெறுவதை முன்னிட்டு, எதிர்வரும் சனிக்கிழமை முதல் இருநாட்கள் பவளவிழா நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த இரு நாள் நிகழ்வுகளும் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகானந்தஜி மகராஜ் தலைமையில் நடைபெறும்.

சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சுன்னாகம் வாழ்வகம் விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லத்தில் மாணவர்களின் பஜனை பாடல்கள், பக்திகீதங்கள் அடங்கிய இசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக செங்கல்பட்டு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி கிருபாஷானந்தஜி மகராஜ், பெங்களூர் ராமகிருஷ்ணமிஷனின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி கீர்த்திதானந்தஜி மகராஜ் ஆகியோர் இந்தியாவிலிருந்து வருகை தருகின்றனர்.

அத்துடன் கொழும்பு ராமகிருஷ்ண மிஷனின் வழி நடத்தலில் கொழும்பின் சில பகுதிகளில் செயற்படும் அறநெறிப் பாடசாலைகளினதும், மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிசனின் அறிநெறிப் பாடசாலையினதும் மாணவர்களின் பல்வேறு ஆன்மீக நிகழ்ச்சிகளும், “இலங்கையில் ராமகிருஷ்ண மிஷன் செயற்பாடுகள்” என்ற பவளவிழா சிறப்புமலர் வெளியீடும் நடைபெறவுள்ளன.

# கம்பன் கழகம் நடத்தும் முத்தமிழ் விழா நிகழ்வு!

கொழும்பு—

கொழும்புக் கம்பன் கழகம் இந்த ஆண்டு நடத்தி வரும் முத்தமிழ் விழாக்களின் வரிசையில் இந்த ஆண்டு ‘ஸ்ரீராமநாம கானாமிர்தம்’ எனும் பெயரிலான இசைவிழா இந்த மாதம் 29ஆம் திகதி சனிக்கிழமை முதல் நவம்பர் மாதம் 05 ஆம் திகதி சனிக்கிழமை வரையிலான 08 நாட்கள் நடத்துவதென கொழும்பு கம்பன் கழகத்தினர் முடிவு செய்துள்ளனர்.

இந்த விழா கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் தினமும் மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 8.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த இசை விழாவில் வழமை போலவே இந்த முறையும் ஈழத்து இசைக் கலைஞர்களும், தமிழ்நாட்டின் தலைசிறந்த இசைக்கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். முதல் நாள் இசை விழாவினைக் கொழும்பு கம்பன் கழகத் தலைவரும், மொறிசியஸ்நாட்டின்இலங்கைக்கான பிரதிநிதியுமான தெ.ஈஸ்வரன் மங்கள விளக்கேற்றுவார்.

முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசரும், கொழும்புக் கம்பன் கழகத்தின் பெருந்தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் தலைமை தாங்கி நிகழ்வைத் தொடக்கி வைக்கவுள்ளார்.

இந்த இசைவிழாவில் கலந்துகொள்ள விரும்புவோர் தங்கள் விபரங்களை கம்பன் கோட்டம், இல 11, இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு-06 எனும் முகவரியுடனோ அல்லது 2360 525 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

# செயலமர்வு

யாழ்ப்பாணம்—

ஆங்கில மொழி மூலம் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சமூகக்கல்வியும் வரலாறும் ஆகிய பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான மூன்றுநாள் செயலமர்வு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள யாழ்.ஆசிரியர் பயிற்சிவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆங்கில மொழிமூல ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இந்தச் செயலமர்வில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டங்களைச் சேர்ந்த ஆங்கில மொழிமூல ஆசிரியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த செயலமர்வு காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.




# மகளிர் உரிமைகள் மனித உரிமைகளே...

இன்று உலக சனத்தொகையில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியினர் பெண்களே. சகல துறைகளிலும் வல்லமை பெற்றவர்கள் பெண்கள் என்று கூறப்படுகிறது. இவ்வாறு அவர்களைச் சகல துறைகளிலும் பயன்படுத்திப் பயன் பெற்றுக் கொள்ளும் சமுதாயம், உலகம் அவர்களது உரிமைகள், சுதந்திரங்களை மட்டும் மனித உரிமைகளாக ஏற்றுக் கொள்வதில் பின் நிற்கிறது. பெண்ணானவள் எப்பொழுதும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு, காரணமின்றியும், பல சந்தர்ப்பங்களில் நீதி நெறிக்கப்பாற்பட்டும், தவறிழைத்தவள், பிழை செய்தவள் என்பதாக இம்சிக்கப்படுகிறாள்.

பெண் ஏன் அடிமையாகிறாள்? எனும் பெரியாரின் கேள்வி பெறுமதியானது. இதனூடாக இரண்டு விளக்கங்களை நாம் பெறவேண்டியுள்ளது. அதாவது - பெண் தானே அடிமையாகின்றாளா? அல்லது ஆதிக்கத்தின் பிடியில் அடிமையாக்கப்படுகின்றாளா? என்பவையாகும். இதனை ஆராய முற்படின், பல்வேறு கோணங்களிலான கருத்துக் கணிப்புகளும், அனுபவம் சார் விடைகளும் கிடைக்கின்றன. பெண் உழைத்தாலும், எந்தவித்தில் பாடுபட்டாலும் அவளது அந்தஸ்து நிலைமாறுவதில்லை. அவளது பால் யதார்த்தம் வெவ்வோறு வகைகளில் பல கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அவளுக்கெதிரான வன்முறைகளையும் கட்டவிழ்த்து, அவளையே பிழை செய்தவளாக, தவறிழைத்தவளாகக் காணுகிறது சமுதாயம்.

பெண்களுக்கெதிரான வன்முறைகள், பொது இடங்களிலிருந்து, பல கோணங்களில் அவளைத் துன்புறுத்துவதில் இன்பம் காணப்படுகிறது. காலாதிகாலமாகக் கற்பிக்கப்பட்டு வந்த பொறுமை, அடக்கம் எனும் குணாம்சங்கள் கட்டுப்படுத்தப்பட்டு, உள்ளுக்குள்ளேயே வெந்து குமைகிறார்கள். பேரிடர்களை அனுபவிக்கும் பெண்கள், வெளியே தமது வன்முறைக்கு எதிராகக் குரல் கொடுத்தால், மேலும் மேலும் அந்தப் பெண் அவமானப்படுத்தப்படுகின்றாள். கீழ் நிலைப்படுத்தப்படுகின்றாள். இந்த நிலைகள் அவளது மனதில் ஆறாத காயத்தை ஏற்படுத்தி விடுகின்றன. சமூகமும் சரி, பெண்களின் நலனில் அக்கறை கொண்டவராகக் கூறுபவர்களும் சரி, இவ்வாறான குற்றம் புரிந்தவர்களைத் தட்டிக்கேட்பதைதோ, தண்டிப்பதையோ விடுத்து - அவர்களை வரவேற்றுக் கௌரவித்து, "மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்தாற் போல'' இவ்வாறான துன்பங்களுக்கு இலக்கான பெண்களையே கண்டிப்பதையும், அவமதிப்பதையும், பழிப்பதையும் காண்கிறோம்.



பெண்களாக இருக்கும் காரணத்தாலோ என்னவோ, பல்வேறு விதமான உடல், உளரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகும் பெண்கள், வன்முறைகளுக்கு ஆளாகும் பெண்கள் இவர்களைத் தவிர, வேறு யாருக்குமேனும் இந்த நிலைமைகள் ஏற்படின், மனித உரிமைகள் துஷ்பிரயோகம் செய்தல் எனவோ, சிவில் அரசியல் நெருக்கடி எனவோ கூறப்படும். பெண்களது மரணங்கள், அவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் என்வற்றுக்குத் தெளிவான பதிவுகள் இருந்தும், பெண்களது உரிமைகள் மனித உரிமைகளாக வகைப்படுத்தப்படுவதோ, புரிந்து கொள்ளப்படுவதோ இல்லை. பெண்களது வாழ்க்கை சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு விளையாட்டு. பெண்களது வாழ்க்கையின் அடிப்படை அம்சங்களை சமூகம் எவ்வாறு நோக்குகிறது என்பதை இது காட்டுகிறது.

பெண்களைப் பொறுத்தவரை இவ்வாறான செயற்பாடுகள் பாதகமான விளைவுகளையே கொண்டிருப்பதால், கோட்பாட்டு ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் பிரச்சினைக்குரியதாகவே விளங்குகிறது. பெண்களுக்கெதிரான சதித்திட்டங்கள் பலரால் நாளும் திட்டமிடப்படுகின்றன. பல்வேறு செய்தி ஊடகங்கள் பெண்களைத் தரம் குறைத்து, அவமானப்படுத்தி, அவளைக் கீழ் நிலையில் மிதிக்கும் வகையிலான செய்திகளையும், சிந்தனைகளையும் வெளியிடுகின்றன.

மகளிர் உரிமைகளும், மனித உரிமைகளே என்று மதிக்கப்படவேண்டியிருந்தும், இன்னும் உதாசீனப்படுத்தப்படும் ஒன்றாகவே காணப்படுவது - வேதனைக்கும், சிந்தனைக்கும் உரிய விடயமாகவே உள்ளது.

மனித உரிமைகள் என்பது சகலருக்கும் சமமான ஒன்றாகும். உலகம் முழுவதும் பொருந்தக் கூடியவை எனக் கருதப்படும் சில ஒழுக்கவியல் நோக்குகளில் ஒன்றாக மனித உரிமை என்ற கருத்தாக்கம் விளங்குகிறது. ஐக்கிய நாடுகள் சபை - 1949 ஆம் ஆண்டு நிறைவேற்றிய மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனம் - இந்த உலக நோக்கின் குறியீடாக விளங்குவதுடன், மனித உரிமைகள் என்பதை மிகவும் பரந்த முறையில் வரையறுக்கிறது. இதன் இரண்டாவது சரத்து - 'இனம், நிறம், பால், மொழி, சமயம், அரசியல், கருத்து, தேசிய அல்லது சமூகத் தோற்றுவாய், சொத்து, பிறப்பு, அல்லது வேறு அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் எந்த வேறுபாடுமின்றி இந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்படும் உரிமைகளும், சுதந்திரங்களும் அனைவருக்கும் உரியதாகும்' எனக் கூறுகிறது. இதன் மூலம் மனித உரிமைகள் என்பது ஒரு சாராருக்கு மட்டுமல்ல, அது ஆண், பெண் என்ற பால் வேறுபாடற்று சகலருக்குமுரிய உரிமையாகும் என்பது தெளிவாகிறது.

'பால்ரீதியான பாரபட்சம் மிக அற்பமான விடயம்' அது முக்கியமானதல்ல. (தொடரும்...)

- மாதங்கி -

# குழந்தை பிறந்ததும் தாய்க்கு தடைகள் போடுவது தவறு



கருவுற்ற காலத்தில் வெளித்தோற்றத்தில் மட்டுமே மாற்றங்கள் ஏற்படுவதில்லை. ஓமோன்களின் செயற்பாட்டால் உடலுக்குள் அனைத்து இயக்கங்களுமே மாறுபட்டுப்போகிறது. இப்படி சுமார் பத்து மாதகாலம் இந்த மாற்றங்களுக்கே பழகிப்போன நம் உடல், திடீரென்று ஒரே நாளில் பழைய நிலைமைக்குத் திரும்பிவிடாது. அந்த மாற்றங்கள் முற்றிலும் இல்லாவிட்டாலும், ஓரளவுக்காவது பழைய நிலைக்கு வரக் குறைந்த பட்சம் ஆறுவார காலம் ஆகும். சத்திர சிகிச்சை ஆனவர்களுக்கும் இது பொருந்தும் என்றாலும், காயங்கள் இருப்பதால் அவர்களுக்குக் கூடுதல் காலம் பிடிக்கும்.

குழந்தை பிறந்ததும், "சூடாகக் காப்பி குடிக்கக் கூடாது...! நீரில் கை வைக்காதே..! குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது மல்லிகைப்பூ கூடாது. மாம்பழமா... கூடவே கூடாது!'' என்று நம் வீட்டுப் பெரியவர்கள் ஒரு பெரிய பட்டியலே போடுவார்கள். உண்மையில் இதெல்லாம் தேவையில்லாத பயங்கள்தான்!

சில வீடுகளில் குழந்தை பெற்றுக் கொண்ட பெண்ணுக்குத் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு வெறும் பாண் மட்டும் தான் சாப்பிடக் கொடுப்பார்கள். இதெல்லாம் தவறான விடயம். பிரசவமான பெண்ணுக்குச் சாதாரணமாக, நாம் வீட்டில் சாப்பிடும் உணவு வகைகளைக் கொடுப்பதுதான் சிறந்தது. அப்படிக் கொடுத்தால் தான், தாய்க்கு இயல்பாக தாய்ப்பாலும் சுரக்கத் தொடங்கும்.

சுகப்பிரசவத்தின் போது கூட சில சமயங்களில் தையல் போட வேண்டி வரலாம். சத்திர சிகிச்சைக்கோ சொல்லவே வேண்டாம். இப்படிக் காயப்பட்ட பெண்களுக்குத் தண்ணீரே கொடுக்கக் கூடாது...அப்படிக் கொடுத்தாலும் தொண்டையை நனைக்குமளவுக்குக் கொடுத்தால் போதும் என்று பல வீடுகளில் சொல்வார்கள்.

தண்ணீர் அதிகம் குடித்தால், காயத்தில் சீழ் பிடித்துவிடும் என்பது அவர்களின் விளக்கம். இந்தத் தண்ணீர்க் கட்டுப்பாடு சில நாட்கள் தான் என்றில்லை...சில மாதங்கள் வரைகூட தொடரும்! இதுவும் மிகவும் தவறான விடயம். உண்மையில் இந்தச் சமயத்தில் தான் தாய் நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும். அப்படி நிறையத் தண்ணீர் குடித்தால் தான், தாய்க்கு நீர்க் கடுப்பு பிரச்சினைகள் ஏற்படாது.

குழந்தை பிறந்தவுடனேயே அத்தனை நாளும் பெரிதாகி, குழந்தையைத் தாங்கி ஏந்திய தாயின் கர்ப்பப்பை மெதுமெதுவாக பழைய நிலைக்கு வந்துவிடும். அந்தச் சமயத்தில் இரத்தப் போக்கு வருவது இயற்கை. 4-5 வாரங்கள் வரைக்கும் இந்த இரத்தப் போக்கு நீடிக்கும். அதற்குமேல் போனால் தவறு. இப்படி அதிகப்படியாக இரத்தப் போக்கு ஏற்படக் காரணம் என்ன...?

தாயின் கர்ப்பப்பையில் நோய்த் தொற்று ஏதேனும் ஏற்பட்டிருந்தால், இப்படிச் சில சமயம் தாயின் கர்ப்பப்பையில் நஞ்சின் பாகங்கள் அல்லது சில திசுக்கள் வெளிவராமல் விட்டுப் போயிருந்தாலும், அதிகப்படியான இரத்தப் போக்கு ஏற்படலாம்.

இப்படி ஏற்படும்போது மருத்துவரை அணுகுவதுதான் நல்லது. மருந்து மூலம் அவரால் தான் இதற்கு நிரந்தரத் தீர்வு கொடுக்க முடியும்.

**இதைப் பற்றி விரிவாகப் பார்க்கலாம்..**


சில பெண்கள் பிரசவம் ஆனதும் தங்களையறியாமல் ஒருவித மன அழுத்தத்தால் அவதிப்படுவதுண்டு. இந்த நிலைக்கு ஆளாகும் பெண்கள் தங்களுக்குள் தாங்களாகவே காரணமின்றி அழுவார்கள். குழந்தையை கவனிக்கக்கூட ஆர்வம் காட்டாமல் ஒருமாதிரி இருப்பார்கள். இது போன்ற சில அறிகுறிகளால் இவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடியும். இந்த நிலைக்குத்தான் Baby Blues என்று பெயர்.

பிரசவம் நடந்த சில நாட்களில் இது தானாகவே சரியாகத் தொடங்கும். சிலருக்கு இதுபோல தீவிரமான பிரச்சினையாக இது உருவெடுக்கலாம். அப்படி அது மோசமான நிலையை அடையும்போது, அதை Puerperal Psychosis என்று பெயரிட்டு அழைக்கிறோம். இது ஏற்கனவே மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வரலாம். சாதாரணப் பெண்களுக்கும் இதுபோல நிலைமை தீவிரமடைவதும் உண்டு.

இந்த நிலை ஏற்படும்போது, சம்பந்தப்பட்ட பெண்ணைத் தனியாக விடுவது நல்லதல்ல.

(தொடரும...)

# காக்க வேண்டும் இதயத்தை!



இதய நோய் வருவதற்குத் தவறான உணவுப் பழக்கம், அதீத மனஅழுத்தம், உடற்பருமன், அவதியான வாழ்க்கை முறை என்று பல காரணங்கள் உண்டு. நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும், இதய நோய்கள் வருவதற்கான வாய்ப்பு அதிகம். இதய நோய்களைப் பொறுத்தவரை வருமுன் காப்பது தான் நல்லது.

இதயநோய் வராமல் தடுக்க நாம் உணவு விடயத்தில் என்னென்ன முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் எனப் பார்ப்போம்.

உடலின் நிறையைக் கட்டுக்குள் வைக்க வேண்டும். அளவுக்கு அதிகமான உடற்பருமன் கூடாது.

இனிப்பு மற்றும் மாப்பொருட்கள் அதிகம் சாப்பிடுவதைத் தவிக்கவேண்டும். தானியங்கள், காய்கறிகள் சரி அரைவாசி விகிதத்தில் உண்ணுதல் வேண்டும். பல வர்ண நிறமுடைய உணவு கண்ணுக்கு மட்டுமல்ல, இதயத்துக்கு ருசி!

அப்பிள், ஒரோஞ், மரக்கறி என்று சாப்பிடுங்கள். கூடுமானவரை உணவில் உப்பைக் குறைத்தே உபயோகியுங்கள். ஒரு நாளுக்கு ஒரு நபருக்கு மொத்தமே ஒன்றரை கரண்டி உப்புக்கு மேல் தேவையில்லை. அதிகம் தேனீர் குடிக்கக் கூடாது. ஒரு நாளுக்கு அதிக பட்சம் மூன்று கோப்பைகளுக்கு மேல் குடிக்க வேண்டாம். உணவில் தாராளமாக உள்ளி, வெங்காயத்தைச் சேர்க்கலாம். இரத்தத்தில் இனிப்பின் அளவைக் கட்டுப்படுத்தவும், இரத்தம் உறைந்து போகாமல் தடுக்கக் கூடியவை வெங்காயமும், உள்ளியுமாகும்.

தினமும் குறைந்து 40 கிராம் அளவு நார்ச்சத்து நிறைந்த உணவுகளை உண்ண வேண்டும். ரின்னில் அடைக்கப்பட்ட உணவுகள் இதயத்துக்கு கேடு விளைவிப்பவை.

வாரத்துக்கு இரண்டு, மூன்று முறை மீன் சாப்பிடலாம். அதிலுள்ள சத்து இதயத்துக்கு மிக நல்லது. கோதுமை, அவல், கொண்டல் கடலை, சோயா, கீரை வகைகள், வெந்தயம், கடுகு ஆகியவற்றிலும் உண்டு.

கொழுப்புச் சத்து நிரம்பிய உணவுகளை நிறைய உண்ணக்கூடாது. ஒருவருக் ஒரு நாளைக்கு சுமார் நான்கு கரண்டி எண்ணெய் போதுமானது.

ஒரே வகை எண்ணெயை உபயோகிப்பதை விட, சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய், கடலை எண்ணெய் என கலந்து உபயோகிக்கலாம்.

# சுனாமி... ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

(29 ஆம் அத்தியாயம்)

கமலம்மா பிள்ளையின்றை முகத்தை உற்றுப் பாத்தா! இரண்டும் நல்ல மாதுளம்பூ நிறமும், மூக்கும் முளியுமாக நின்றன. கண்ணில் இருந்த சிரிப்பு கமலம்மாவின் உள்ளத்தை அசைத்தது. வெளியே மழை மீண்டும் கொட்டத் தொடங்கியது. பிள்ளைகளின் பார்வை ஈயக் குண்டானில் இருந்த கோப்பியில் இருப்பதைக் கண்ட கமலம்மாவுக்குப் பொறுக்கவில்லை. உடனே செயற்படத் தொடங்கினாள். சுவரோடு சாத்திக் கிடந்த பலகைக் கட்டைகளை எடுத்துப் போட்டாள்.

பிள்ளையள் இரண்டு பேரும் இதிலை இருங்கோ!

அவள் எப்போது சொல்லுவாள் என்று காத்திருந்தது போல உடனே இரண்டு பேரும் ஓடி வந்து பலகைக் கட்டையில் குந்தினார்கள். சங்கரின் முகத்தில் ஏதோ... எழுதிக் கிடந்தது. அதைக் கமலம்மாள் படித்து விட்டாள். இரண்டு மூக்குப் பேணியில் பால் கோப்பியை ஊற்றிப் பிள்ளைகளிடம் நீட்டினாள். இருவரும் கையில் வாங்கிக் கொண்டார்கள். அவர்கள் கண்களில் நன்றி தேங்கிக் கிடந்தது. ஆனால் எப்படிக் குடிப்பது. இந்த மூக்குப் பேணியை அவர்கள் இதுவரை கண்டதில்லை! கமலம்மாவுக்கு அவர்களுடைய சிக்கல் விளங்கி விட்டது. பாவம் பிள்ளையள்...!

"நீங்கள் வாய் வைச்சுக் குடியுங்கோ பரவாயில்லை!"

அவள் சொன்னது....சங்கருக்குக் கொஞ்சம் சங்கடமாயிருந்தது. மூக்குப் பேணியால் குடிக்க முயற்சி செய்தான். அதன் பலன் கோப்பியெல்லாம் அவனுடைய சட்டையில் சிந்தியது. தங்கையோ வாயை வைத்துப் பொச்சடித்துக் கோப்பியை ரசித்துக் குடித்துக்கொண்டிருந்தாள்.

"தம்பி நீ வாய்வைச்சுக்குடிராசா!"

கமலம்மாவின் பரிவான வேண்டுகோளை இப்போது அவன் அலட்சியம் செய்யவில்லை. மடமடவென்று குடித்து முடித்தான். இப்போ கமலம்மா பிள்ளையிடம் விபரத்தைக் கேட்க எண்ணினாள். அதற்கிடையில் வாத்தியாரின் குரல் கேட்டது. மழை இரைச்சலைத் தாண்டி அடுக்களையில் வந்து மோதியது.

"கமலம்!...கமலம்! இஞ்ச ஒருக்கா வந்திட்டுப்போ! கமலம் எழும்பி விறாந்தைக்குப் போனாள்!

"அண்ணை எனக்கு இன்னும் பசிக்குது!"

கோப்பி குடித்த தங்கை தொடங்கினாள். சங்கருக்குக் கோபம் வந்தது.

"உனக்கு எப்பவும் பசிதான்!...பேசாமல் கையைச் சூப்பிக்கொண்டிரடி!" அவன் உறுமிக்கொண்டே சொன்னான். தங்கை ஒன்றும் பேசவில்லை. அடுக்களையை நோட்டம் விட்டாள். சுத்தமாகச் சாணத்தால் மெழுகப்பட்ட தரை. மூன்று அடுப்புகள்! அதிலை ஒரு அடுப்புக்குப் பின்னால் ஒரு அடுப்பு. அதில் ஒரு பானை! அதற்குள் ஏதோ கொதித்துக் கொண்டிருந்தது. முன் அடுப்பில் ஏதோ அவிந்து கொண்டிருந்தது. மரவள்ளிக் கிழங்கின் மணம்! இப்போ சங்கரும் சேர்ந்து மூக்கை உறிஞ்சினான். திடீரென அம்மாவின் நினைவு வந்தது. காலையில் மரவள்ளிக்கிழங்கு அவித்துச் சுடச்சுடத்தருவாள். கூடவே ஒரு பச்சடி! ஆகா... என்ன ருசி. சங்கருக்கு வாயூறியது. இப்போ கமலம்மா திரும்பி வரும் அரவம் கேட்டது.

"நல்ல மழை பெய்யுது!...பொழுதும் இருட்டிப்போச்சு!" கோப்பியை இன்னொரு மூக்குப்பேணியில் ஊற்றியபடியே கமலம்மா சொன்னபோது - பிள்ளைகள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"சரி....வாங்கோ...விறாந்தைக்குப் போவம்!"

மறுபேச்சில்லாமல் இருவரும் எழும்பி அவர்கள் கமலம்மாவுக்குப் பின்னே நடந்தார்கள். இடையே மண்டபத்தைத் தாண்டும் போது சங்கரின் பார்வை சுவரில் விழுந்தது. அதில் ஒரு படம்! குழந்தைக் கண்ணன் தவழும் நிலை. பெரிய படம்! அவன் கண்களை அதிலிருந்து எடுக்க முடியாமல் ஒரு கணம் நின்றான்.

"அண்ணை வா!...போவம்!...." தங்கை கையைப் பற்றி இழுத்தாள். இந்த வீட்டில் வேறு ஒருவரும் இல்லைப்போல. அவள் மனம் ஏதோ யோசனை செய்தது. விறாந்தையில் அவர்களைக் கூட்டி வந்தவர் சற்றுக்கோபமாக இருந்தார்.

"என்ன!...திறந்த வீட்டுக்கை நாய் நுழையுறது போல நுழைஞ்சிட்டியள்!" பிள்ளைகள் ஒன்றுமே பேசவில்லை. கமலம்மா சொன்னா...!

"அதுகள் சின்னப்பிள்ளையள்! நல்லாக் களைச்சுப் போச்சுக்கள்!"

"அதுசரி இப்ப என்ன செய்யப் போறியள்?" வாத்தியார் கேட்டார்.


"மழையும் பெய்யுது!.... இப்ப திரும்பி இதுகளைச் சிறுவர் இல்லத்துக்குக் கூட்டிக் கொண்டு போக ஏலாது!..அதுதான் யோசிக்கிறன்!" அவர் சொல்லி முடிக்க மண்டபத்துக்கை இருந்த சுவர் மணிக்கூடு அடிக்கத்தொடங்க சங்கர் எண்ணினான்!...

"ஒன்று ....இரண்டு....எட்டு!" அது எட்டுத்தடவை ஒலித்துவிட்டு அமைதியானது.

"எட்டு மணியாப் போச்சு!" கமலம்மா சொல்ல வாத்தியார் வாயைத் திறந்தார்!

"மழை விட நீங்கள் போறதுதான் நல்லது!" ஆனால் மழையோ பேரிரைச்சலோடு பெய்யத் தொடங்கி, விறாந்தையெல்லாம் தூவானம் அடித்தது.

"இப்ப உள்ள போவம் வாருங்கோ!..." கமலம்மா சொல்ல வாத்தியாரும் எழும்பினார். எல்லோரும் மண்டபத்துள் வந்தனர். கமலம்மா பாயை விரிக்க அதில் வந்தவர் குந்தினார். வாத்தியார் நீள வாங்கிலில் இருந்தார். இப்போ மழையோடு காற்றும் சேர்ந்து கொண்டிருந்தது. மண்டபத்தில் மேசையில் இருந்த மேசை விளக்குப் பட்டென்று அணைந்தது. எங்கும் ஒரே இருட்டு. வாத்தியார் மடியில் இருந்த நெருப்புப் பெட்டியை எடுத்து உரசிப்பற்ற வைத்தார். அரிக்கன் லாம்பைக் கொழுத்தினார். அந்த வெளிச்சம் எல்லோருடைய முகத்தையுட தெளிவாகக் காட்டியது.



"இண்டைக்கு இரவு இஞ்சை நிண்டிட்டுப் போங்கோ!"

வாத்தியார் உத்தரவு கொடுத்து விட்டார். கமலம்மா ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவவின்ர முகத்திலை ஒரு கேள்விக்குறி தென்பட்டது. யாரோ!.. முன்பின் தெரியாத அந்நியன்!...ஆனால் சின்னக்கிளியின்...கணவன்!...இவன் இங்கே தங்குவது...என்னென்ன குழப்பங்களைக் கொண்டுவரப் போகுதோ? அவள் மனம் சஞ்சலப்பட்டது. சின்னக்கிளி சொன்ன செய்திகள்!...இப்ப இந்தப் பிள்ளையள் ஆர்?...

"சரி!....நான் இரவுச் சாப்பாட்டுக்கு ஒழுங்கு செய்யிறன்! திடீரென்று தங்கை அழத்தொடங்கினாள்!....

நான் என்ர...அம்மாட்டைப் போக வேணும்!....ம...ம...! அவளுடைய அழுகுரல் எல்லோரையும் உலுப்பி விட்டது. இங்கே தங்குவது என்பது பிள்ளையின் மனத்தில் பயத்தை ஏற்படுத்தி விட்டது. அம்மாவிடம் போக முடியாதோ!...

"நாளைக்குக் காலையிலை அம்மாட்டைப் போகலாம்!...." கூட்டி வந்தவர் சொன்னதைக் கேட்டபோது சங்கருக்குக் கோபம் வந்தது.

"மாமா!.... நீங்கள் ஆரெண்டு எங்களுக்குத் தெரியாது...! பாதரிட்டைப் பொய்சொல்லி எங்களைக் கூட்டிக் கொண்டு வந்திட்டியள்!" வாத்தியார் இப்போ வந்தவரைப் பார்த்தார்.

"என்னையா உங்கடை சொந்தம் எண்டு சொன்னியள்! இப்ப இந்தப் பிள்ளை வேறை என்னவோ சொல்லுது! எந்தப் பாதரிட்டை இந்தப் பிள்ளையள் இருந்தவை?"

"இந்தப் பிள்ளையள் என்ரை மனுசி வழியாலை நெருங்கின உறவு ஐயா!

இதுகளுக்கு ஒண்டும் தெரியாது! என்ரை மனுசியவையும் பழகிறதில்லை!"

"உங்கடை மனுசி எங்கையிருக்கிறா?"

"இஞ்சை தான் எங்கையோ தென்னங்காணி குத்தகைக்கு எடுத்து இருக்கிறாவாம்!"

இப்ப சங்கர் வாயைத்திறந்தான்!

மாமா!...எங்களை எங்கடை அம்மாவிட்டைக் கொண்டுபோய் விடுங்கோ! இல்லாட்டிப் பாதரிட்டைக் கொண்டுபோய் விடுங்கோ!"

"சும்மா விசர்க்கதை கதையாதை! நீ சின்னப் பொடியன் பேசாமலிரடா!" அவர் கொஞ்சம் உரத்த குரலில் அதட்டினார். கமலம்மா சொன்னா..!

"ஏன் இப்ப பிள்ளையை வெருட்டிறியள்! அதுகளின்ரை தாயைட்டைக்கொண்டு போறன் எண்டு பொறுப்பெடுத்துப் போட்டு இப்பிடி அலைக்கழிக்கிறதே" இப்ப மழை கொஞ்சம் ஓய்ந்திருந்தது. ஆனால் பிள்ளைகளின் கண்ணீர் மழை கொட்டத்தொடங்கியது. கமலம்மா பரிதாபப்பட்டாள்.

"பாவம்!...தாயைப் பிரிஞ்சு அந்தரிச்சு நிக்குதுகள்!... இவன் சின்னக்கிளியைத் தொந்தரவு செய்யத்தான் வந்திருக்கிறான்!"

"தம்பியவை அழாதையுங்கோ! நாளைக்கு விடிய உங்களை நான் அம்மாட்டைக் கூட்டிக்கொண்டு போறன்!" கமலம் நீ போய்ப் பிள்ளையளுக்கு சாப்பாட்டைக்குடு! பாவம் பசியோடை இருக்குதுகள்!" கமலம்மா ஒன்றும் பேசாமல் இரண்டு பேரையும் கையைப்பிடித்து அழைத்துக் கொண்டு அடுக்களைக்குப் போனா.

அடுப்பிலிருந்த மரவள்ளியை இறக்கித் தட்டத்தில் எடுத்துப் போட்டா. கொஞ்சம் சம்பலையும் வைத்துப் பிள்ளைகளிடம் கொடுத்தா.

கண்ணீர் வடிய கிழங்கைச் சம்பலில் தொட்டுச் சாப்பிடும் அந்தக் காட்சி! கமலம்மாவை வருத்தியது!

"சந்நிதியானே!... ஏன் இந்தக் குஞ்சுகளைக் கஷ்டப்படுத்திறாய்! பாவம்! தாயைத் தேடி அலையுதுகள்!" சங்கரின் தட்டில் மரவள்ளி முடிந்துவிட்டது. இன்னும் இரண்டு முறியை எடுத்து வைத்துச் சம்பலையும் வைத்தாள்.

அவன் நன்றியோடு அவளைப் பார்த்தான்.

"மத்தியானம் அம்மாவிட்டைப் போறம் எண்டு நல்லாச் சாப்பிடல்லை!

இது அமுதமா இருக்கு" அவன் குரல் கமலம்மாவின் காதில் ஒலித்த போது...

ஏழைக்கு உணவு என்பதைவிட பசித்த குழந்தைக்கு உணவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்!

"அம்மா! எனக்கு இன்னொன்று வேணும்!"

உரிமையோடு மற்றப் பிஞ்சு முகம் கேட்டது.

பசிதீர அழுகை மாறிசுவை நாடும் அந்தப் பெண் குழந்தைக்கும் இன்னும் இரண்டு முறியைத் தட்டில் வைத்தாள்.

அது தட்டில் இருந்த சம்பலை சுட்டு விரலால் தொட்டு நக்கிவிட்டு தலையைச் சாய்த்துக் கமலம்மாவைக் கேட்டது!

"அம்மா! உங்கடை பிள்ளையள் எங்கை?"...

(தொடரும்)

# கர்ப்பப்பையை மாற்றி குழந்தைபெறலாம்

"பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல பிற" என்றார் வள்ளுவர்.

பெண்ணைப் பெருமைக்குரியவராக ஆக்குவது தாய்மைதான். ஆனால், அந்த பெருமையும், பேறும் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை! மகனையோ, மகளையோ கொஞ்ச முடியாத வேதனை போதாதென்று "மலடி" என்ற இழிவான பட்டத்தையும் காலமெல்லாம் சுமக்க வேண்டிய கட்டாயம் சிலருக்கு ஏற்படும்.

இந்த நிலையைப் போக்குவதற்குப் பல்வேறு மருத்துவ முறைகளிலும், புதிய புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றுள் சில வெற்றியும் பெற்று, பலருடைய வாழ்க்கையில் வசந்தத்தையும் வரவழைத்துள்ளன.


ஏற்கனவே குழந்தை பெறுவதற்கான பலமுறைகள் வாடகைத்தாய், பரிசோதனைக் குழாய் மூலம் குழந்தை என்று இருந்தபோதிலும் - குழந்தையைத் தன் வயிற்றிலேயே சுமந்து, தாமே பெற்றெடுக்க வேண்டும் என்று ஆசைப்படும் பெண்கள் உலகில் அதிகம். அவர்களுக்குக் கைகொடுக்க வந்திருக்கும் முறைதான் கருப்பை மாற்று சிகிச்சை.

அதிலும் குறிப்பாக, இளமையிலேயே புற்றுநோயின் தாக்குதலுக்கு ஆளாகி சிகிச்சைகளைப் பெறும் பெண்களுக்கு கருப்பை பாதிக்கப்பட்டு, அதனால் குழந்தை பெறும் தகுதியை இழந்து விடும் பெண்களுக்கு இந்த முறை மாபெரும் பேறு, வரப்பிரசாதம் என்று சொன்னாலும் அது மிகையாகாது.

முதன்முதலாக இந்த முறைமூலம் மேலை நாட்டில் 32 வயதுப் பெண்மணி ஒருவர் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்து, வெற்றிகரமானது என்பதையும் நிரூபித்துள்ளார். இந்தச் சாதனையை மகளிர் நோயியல் மருத்துவர் ஒருவரே சாதித்துள்ளார்.

அந்த பெண்மணிக்குப் புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கான சிகிச்சையைத் தொடங்குவதற்கு முன் - இவருடைய கருப்பையின் முக்கியப் பகுதியான கரு உருவாகும். ஓவரியன் (Ovarian) பகுதி அவருடைய உடலிலிருந்து அகற்றப்பட்டு, உறை நிலையில் பாதுகாப்பாக வைத்துப் பராமரிக்கப்பட்டு வந்தது.

சம்பந்தப்பட்ட பெண்மணி புற்றுநோயிலிருந்து குணமடைந்து, ஐந்து ஆண்டுகள் ஆன பிறகு, உறை நிலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த அவருடைய கருப்பை மீண்டும் பழைய இடத்திலேயே பொருத்தப்பட்டது. 5 மாதங்கள் கழித்து அவருடைய மாதவிலக்குச் சுழற்சி மீண்டும் உருவாக்கப்பட்டது. அதன் பிறகு அந்தப் பெண் இயற்கையாகக் கருத்தரித்து அழகான குழந்தையை ஈன்றெடுத்தார்.



உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலும் புற்றுநோய்க்கு ஆளாகி, குழந்தை பெறும் வாய்ப்பை இழந்து நிற்கும் லட்சக்கணக்கான பெண்களின் வாழ்க்கையில் இந்த முறை ஒளியேற்றும் என்பது நிச்சயம்.

# பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பசுந்தேசம் பாடல் குறுவட்டு வெளியீடு





வவுனியா—

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வெளியீடான பசுந்தேசம் பாடல் குறுவட்டு நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

இசையமைப்பாளர் சிறீசுகனின் இசை நெறியாள்கையில் இந்தப் பாடல் குறுவட்டு உருவாக்கப்பட்டது.

மன்னார்- ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் முற்பகல் 11 மணிக்கு இந்தக் குறுவட்டு வெளியீடு நடைபெற்றது.

பொதுச்சுடரை மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனத் தலைவர் சவுந்தரநாயகம் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் ஏற்றிவைத்தார்.

நிகழ்வுச் சுடரை முதற் பெண் மாவீரர் 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் தந்தையார் பேதுருப்பிள்ளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட விவசாய போதனாசிரியர் கோமதாஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதன்பின்னர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த கருணாநிதி வரவேற்புரையை நிகழ்த்தினார்.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையுரையை நிகழ்த்தினார். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் பாடல் குறுவட்டை வெளியிட்டு வைக்க, தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் பெற்றுக்கொண்டார்.

முதல்பிரதியைதமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா வழங்க, தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பெற்றுக் கொண்டார்.

புலிகளின் குரல் பொறுப்பாளர் ந.தமிழன்பன் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். தமிழீழ அரசியற்துறைத்துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் சிறப்புரையை நிகழ்த்தினார்.

எழுத்தாளர் பு.சத்தியமூர்த்தி மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார்.

மன்னார் மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் இனியவன் சிறப்புப் பிரதியை வழங்க, மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் சுதாகரன் பெற்றுக்கொண்டார்.

இதனையடுத்து குறுவட்டு ஆக்க கலைஞர்கள் பரிசில்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டனர்.

புலிகளின் குரல் வானொலி மன்றங்களின் இணைப்பாளர் பா.நாதன் பதில் உரையை வழங்கினார்.

மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் செழியன் நன்றியுரையை நிகழ்த்தினார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன திட்ட இணைப்பாளர், பணியாளர்கள், விவசாயப் பிரதிநிதிகள், மதகுருக்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நடமாடும் சேவை

கிளிநொச்சி—

கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலகத்தின் நடமாடும் சேவைகள் மூலம் தற்போது கரைச்சிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளிலுள்ள காணி சம்பந்தமான பிரச்சினைகள் இனங்காணப்பட்டு, அதற்கான உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் இன்று வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராம மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு, ஆனைவிழுந்தான் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரையும் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதேபோன்று எதிர்வரும் 24 ஆம் திகதியன்று அம்பாள்குளம் கிராம மக்களுக்கான காணி சம்பந்தமான விசாரணைகள் கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதென கரைச்சிப் பிரதேச செயலகக் காணி உத்தியோகத்தர் செ. ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார்.

## விவசாய உள்ளீடுகள் வழங்கல்

பூநகரி—

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பள்ளிக்குடா கிராம சேவகர் பிரிவில், செம்பன்குன்று கிராம விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் செம்பன் குன்று கமக்கார அமைப்புத் தலைவர் தா.கிருஸ்ணசாமி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை விவசாயப் போதனாசிரியர்களான சத்தியா நடராசா, சதீஸ்வரன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் சதீஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்தப் பிரதேசத்திலுள்ள வறுமைக் கோட்டின் கீழுள்ள 25 விவசாயிகளுக்கு மேட்டு நிலப் பயிர் விதைகளும், மரக்கறி விதைகளும், அடிக்கட்டுப் பசளையாக ஏ.ஐ. உரமும் வழங்கப்பட்டன.

## உதயநகர் கிராமத்துக்கு செல்லும் இரு பிரதான வீதிகள் சேதம்

உதயநகர்—

கனகபுரம் வீதியிலிருந்து தெற்குப் பக்கமாக உதயநகர் மேற்கு - கிழக்கு கிராமங்களுக்குச் செல்லும் இரு பிரதான வீதிகளும் மிகவும் சேதமடைந்து கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றன.

ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வீதி, நாகதம்பிரான் வீதி ஆகிய இரு வீதிகளுமே கடந்த பல வருடங்களாகக் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் இந்த வீதிகளின் புனரமைப்பு வேலைகள் முற்று முழுதாக மக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டுவந்தன. மீளக்குடியமர்வின் பின் நீர் போக்கி அமைக்கப்பட்டு, பெயரளவில் கூடிய தூரம் கிரவல் போடப்பட்டது.

தற்போது அந்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. வீதியின் இரு கரைகளும் முறையாக வடிகால்கள் அமைக்கப் பெறாததன் காரணமாக, மழை நீர் வழிந்தோட முடியாத நிலையிலுள்ளது.

இந்த வீதிகளைப் புனரமைப்புச் செய்து தரும்படி பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டும், இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இது விடயமாக சம்பந்தப்பட்டவர்கள் பாராமுகமாக இருப்பது கண்டு மக்கள் விசனமடைந்துள்ளனர்.

மாரி காலத்தில் இந்த வீதிகள் மேலும் பாதிப்படைந்துள்ளதால், மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### ஒக்ரோபர்-21

1493: கொலம்பசினால் வர்ஜியன் தீவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

1802: முதன் முதலாக இந்தியாவில் தனிப்பட்டவர்கள் தபால் மூலம் பார்சல் அனுப்பும் வசதி கொண்டுவரப்பட்டது.

1824: பிரித்தானியாவைச் சேர்ந்த ஜோஸப் ஆப்ஸ்டீன் என்பவர் சீமெந்து தயாரிப்பதற்கான காப்புரிமையைப் பெற்றார்.

1863: முதன் முதலாக லண்டனில் உதைபந்தாட்டச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1879: தோமஸ் அல்வா எடிசனால் கண்டுபிடிக்கப்பட்ட கார்பன் இழை கொண்ட மின்குமிழ் முதன் முதலாக அதிக நேரம் ஒளிர்ந்தது.

1916: அகமதாபாத்தில் நடந்த 16 ஆவது மாநில அரசியல் மாநாட்டில் வைத்து மகாத்மாகாந்தி, முகம்மதலி ஜின்னாவிடம் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி கேட்டுக் கொண்டார்.

1935: சர்வதேச சங்கத்திலிருந்து ஜேர்மனி விலகியது.

1942: அமெரிக்க வரலாற்றிலேயே முதன் முறையாக அமெரிக்க காங்கிரஸ் வரி விதிப்பை மேற்கொண்டது. வெற்றி வரி என்ற ஒன்றையும் அறிமுகப்படுத்தியது.

1943: சிங்கப்பூரில் கதே சினிமா மண்டபத்தில் மூவர்ணக் கொடியைப் பறக்கவிட்டு, நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் சுதந்திர இந்திய அரசை அமைத்தார். டில்லி சலோ என்ற முழக்கத்துடன் புனிதப் போரான இந்த விடுதலைப் போரை எனது மூச்சு இருக்கும்வரை நடத்துவேன் என்று கடவுள் பெயரால் உறுதிமொழி செய்து கொடுக்கிறேன். விடுதலைக்குப் பின்னரும் இந்த விடுதலையைப் பேணிக் காக்க எனது உடலில் உள்ள கடைசிச் சொட்டு இரத்தம் வரை சிந்தத் தயாராக இருக்கிறேன் என்று மும்முறை கூறிச் சத்தியப் பிரமாணமும் செய்தார்.

1950: சீனா - திபெத்தை ஆக்கிரமித்தது. 15 வயதுடைய தலாய்லாமாவை அகற்றிவிட்டு, புத்தரின் மறு அவதாரம் எனக் கூறி பஞ்சன் லாமாவை அறிவித்து அவரை அதிகாரபீடத்தில் அமர்த்த நடவடிக்கை எடுத்தது.

1960: பிரிட்டனில் முதலாவது அணு சக்தியில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பலான ஹெச்.எம்.எஸ். டிரெட் நொட் மிதக்கவிடப்பட்டது.

☆: முற்றிலும் இந்தியத் தயாரிப்பான ஐ.என்.எஸ். அஜய் எனப்படும் ரோந்துப் படகு, இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட்டு, பணியில் ஈடுபட ஆரம்பித்தது.

1976: இந்த ஆண்டு நோபல் பரிசு ஆறு துறைகளைச் சேர்ந்த ஒன்பது பேருக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அவர்களுள் ஏழு பேர் அமெரிக்கர்கள். சமாதானத்துக்குரிய நோபல் பரிசை மட்டும் பெற்றுக் கொண்ட இருவர் பிரித்தானியாவைச் சேர்ந்தவர்கள்.

1991: லெபனான் தீவிரவாதிகளால் ஐந்து ஆண்டுகளுக்கு முன் பிணைக் கைதியாகப் பிடித்துச் செல்லப்பட்ட அமெரிக்கரான ஜென்ஸி டர்னர் விடுவிக்கப்பட்டார்.

1993: கிழக்கு ஆபிரிக்க நாடான புரூண்டியில் இராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றியது. அதிபர் மெல்கியோர் எண்டதாலே உட்பட பல அமைச்சர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர். .

1998: தமிழர் இனப்பிரச்சினை தொடர்பாக நூல் ஒன்றை வெளியிட்டவரும், இந்திய அரசின் உண்மை முகத்தை உலகிற்கு எடுத்துக் கூறிவந்தவருமான மா மனிதர் சிவானந்த சுந்தரம் மரணமடைந்தார்.

தொகுப்பு— சந்துரு

## வன்னி இளைஞர்களின் தொழில் பிரச்சினைக்கு தீர்வுகாண தொழில் வங்கி அமைக்கப்படும்!

### - அமைச்சர் பதியுதீன் தெரிவிப்பு -

வவுனியா—

வன்னி மாவட்ட இளைஞர்களின் தொழில் பிரச்சினைகளை இனங்கண்டு, அதற்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்கவென தொழில் வங்கியொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக, புனர்வாழ்வு வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள 254 இளைஞர்களுக்கு சாரதிப் பயிற்சியை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தத் தொழிற்பயிற்சிக்கென அமைச்சு 20 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

யுத்தத்தால் இந்தப் பிரதேசம் மட்டுமல்ல, மக்களும் பெரிதும் பின்னடைவுகளைச் சந்தித்துள்ளனர். படித்த இளைஞர்கள் பிரதேசத்தின் வளமாகும். இதனை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் அபிவிருத்தியின் பங்காளிகளாக அவர்களை மாற்ற முடியும்.

இவற்றை இனங்கண்டதன் பயனாக மூவினத்தையும் உள்ளடக்கிய இளைஞர்களைத் தெரிவு செய்து, சாரதிப் பயிற்சிகளை வழங்குவதுடன் அவர்களுக்கு உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் தொழில் பெற்றுக் கொள்ள வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

அமைச்சுப் பதவிகள் மக்களின் நலனை மையமாகக் கொண்டு பெறப்பட்டவை. எதிர்காலத்தில் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தி பல மடங்காக அதிகரிக்கும் என அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட சமுர்த்தித் திட்ட இணைப்பாளர் முத்துமுகமத், அமைச்சின் மாவட்ட இணைப்பாளர்களான மௌலவி எஸ். எச். தாஹிர், முன்னாள் கிராம அதிகாரியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளருமான என்.பி. ஆப்தீன், வவுனியா மாவட்ட அமைப்பாளர் எம். பஷீர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

## நீர்த்தேக்கம் புனரமைக்க நடவடிக்கை

மன்னார் மாவட்டத்தில் மிகப் பெரிய நீர்த் தேக்கமான கட்டுக்கரை நீர்த் தேக்கம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

நியாப் இரண்டாம் கட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள இந்த நீர்த்தேக்கத்தின் கீழுள்ள குளங்களும், வாய்க்கால்களும் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறன.

இந்த வாய்க்கால்கள் புனரமைப்புக்கென 5 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நானாட்டான், முருங்கன், வங்காலை ஆகிய பகுதிகளின் குளங்களுக்கு இந்தப் பிரதான கட்டுக்கரை நீர்த் தேக்கத்திலிருந்தே நீர் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

ஒரேநாளில் பணக்காரன் ஆக வேண்டு மென்று நினைப்பவன் ஒரு வருடத்திற்குள் தூக்கிலிடப்படுவான்.

## நமது நோக்கு

# தென்பகுதி அரசியல் தலைமைகளின் சிந்தனைகளும், விஞ்ஞாபனங்களும்...

'மஹிந்தவின் சிந்தனை' என்ற பெயரில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனம், அவருடைய தனிப்பட்ட சிந்தனையின் அடிப்படையிலானது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்ல, அவரின் இந்தச் சிந்தனைகள் பெரும் குழப்பங்களை கொண்டுள்ளதாகவும், அது ஜனாதிபதி சந்திரிகாவின் சிந்தனைகளுக்கு முரணானதாக உள்ளதாகவும், அவரை ஆதரிக்கும் கட்சிகளின் ஐம்பதுக்கும் அதிகமான நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு சிந்தித்த சிந்தனைகள் மட்டுமே உள்ளடங்கியதான இந்தத் தேர்தல் விஞ்ஞாபனமானது- மீண்டும் போரை ஆரம்பிப்பதற்கான கொள்கைத் திட்டங்களையே பொதுமக்கள்முன் வைத்துள்ளதுடன், நாட்டைப் பேரழிவுக்குள் தள்ளப் போவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எச்சரித்துமுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினரின் இந்தக் கருத்து மிகவும் சரியாக இருந்தாலும் கூட, அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனக் கருத்துக்களில் கூட ஏதாவது நம்பிக்கையூட்டும் ஆக்கபூர்வமான கருத்தெதனையும், கொள்கைகள் எதனையும் தெளிவாக உள்ளடக்கியிருக்கிறதா என்றால் அதுவுமில்லை என்றே கூறவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் விஞ்ஞாபனமாக இருந்தாலென்ன, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியின் 'மஹிந்தவின் சிந்தனை' என்ற பெயரிலான விஞ்ஞாபனமாக இருந்தாலென்ன எல்லாமே பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனைகளின் அடிப்படையிலான கொள்கைகளையே இது காலவரை கொண்டுள்ளன என்பது தமிழ் மக்கள் அறிந்த விடயமாகும்.

கடந்த மூன்று தசாப்த காலமாக இந்த நாட்டில் நடைபெற்ற சகல தேர்தல்களின் போதும், தென்னிலங்கை அரசியல் தலைமைகள் தமது கட்சிகளின் சார்பில் வெளியிட்ட சகல தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் சமாதானம், அமைதி, இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்ற கோஷங்களை உரத்த தொனியில் முன்வைத்திருந்தாலும், பதவிக் கதிரையில் ஏறி அதிகாரம் செய்யத் தொடங்கியதும் தமிழ் மக்கள் மீதான போரை தீவிரப்படுத்தி, இராணுவரீதியிலான ஒடுக்கு முறைகளை அவர்கள் மீது திணிப்பதையே வெறியுணர்வுடன் கூடிய இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டனர் என்பது வெளிப்படையான வரலாற்று உண்மையாகும்.

இன்றும் ஒற்றையாட்சி மூலம் தீர்வு, அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு, சமஷ்டி முறையிலான தீர்வு என்றெல்லாம் நாட்டுமக்களையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றிவரும் பிரதான தென்பகுதி அரசியல் வாதிகள் அனைவரும் தமிழர் பிரச்சினைக்குரிய தங்களின் ஆழ்மன விருப்பத் தேர்வாக யுத்தத்தை மட்டுமே நிரந்தர கொள்கையாக தீர்மானித்து அதனையே நடைமுறைப்படுத்தியும் வந்துள்ளார்கள் என்பதை அவர்களால் நேரடியாக நிரந்தரமாகப் பாதிக்கப்பட்டு, போரின அழுத்தங்களால் அல்லல்பட்டு அவதியுறும் தமிழ் மக்கள் மட்டுமே அறிவர். இடைக்காலங்களில் அவ்வப்போது பரபரப்பாகப் பேசப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பான அறிவிப்புக்களும், அறிக்கைகளும் யுத்தத்திற்கு புத்துயிர் அளிப்பதற்கான ஓய்வு நிலையென்பதே உண்மையாகும்.

சர்வதேச நாடுகள் சம்பந்தப்பட்ட சமாதான முயற்சிகளால் கூட தமிழ் மக்கள் நன்மையடைந்ததாக வரலாறு கிடையாது.

அத்தகைய முயற்சிகளில் சமாதானம் செய்ய வந்தோர் தங்களது அரசியல், இராணுவ நோக்கங்களை எட்டுவதையே நோக்கமாகக் கொண்டு பேரினவாதிகளுடன் உடன்பாடு செய்து[illegible]டது - தமிழ்மக்களை துவம்சம் செய்த கொடுமைக்கு [illegible]ந்தியா - இலங்கை உடன்பாடு ஒரு ஆதார சான்றாகும்.

பேரினவாத தலைமைகள், உலக நாடுகளை தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை பயங்கரவாத செயற்பாடு என அடையாளப்படுத்தி நம்பவைத்துக்கொண்டே, சமாதானம் பேசுவதாகவும் பாசாங்கு செய்தனர்.

தற்போதைய நோர்வே அனுசரணையுடனான பேச்சுவார்த்தைகளில் ஐக்கிய தேசிய முன்னணி என்ற ரணில் தலைமையிலான அரசாங்கமும் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரிலான ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசும் எத்தகைய உள்நோக்கத்துடன் கலந்துகொண்டார்கள் என்பதை நோர்வே அரசே அறியும்.

இந்த நிலையில் புதிதாக பதவியேற்கத் துடிக்கும் இரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் தமிழர் பிரச்சினைகுறித்தே தீர்க்கமான எந்தவொரு கொள்கைகளையும் உடையவர்களாக இல்லை.


மஹிந்தவின் சிந்தனையானாலென்ன, ரணிலின் விஞ்ஞாபன அறிவிப்புக்கள் என்றாலென்ன, அனைத்துமே பேரினவாத கொள்கைகளின் தளத்தில் இருந்து எந்தக்காலமும் விலகிப்போவது கிடையாது என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொண்டு வெகுகாலமாயிற்று.

பேரினவாத தலைமைகள் தத்தமக்குள் தற்போதைய தேர்தல் விஞ்ஞாபனங்கள் குறித்து மோதிக்கொள்வதும், முரண்பட்டுக்கொள்வதும் அவர்களின் வழமையான அதிகார கதிரையைக் கைப்பற்றுதலின் அடிப்படையிலானதேயாகும்.

இங்கு அவர்கள் தேசிய நலன் என்று பேசுவது சிங்கள பௌத்த மக்களின் தேசியம் குறித்ததே தவிர, தமிழ் பேசும் மக்களின் தேசியத்தனித்துவத்தை அங்கீகரிக்கும் நோக்கம் கொண்டதல்ல என்பதை சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேசம் புரிந்துகொண்டால் நல்லது.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# புலிகளின் அறிவிப்புக்கள் என வெளியாகும் பொய்யும் புரட்டும்!

விடுதலைப் புலிகளைப் பற்றி எதையும், எப்படியும் பத்திரிகைகளில் எழுதலாம். உலகில் புலிகளைப் பற்றி எவ்வளவு மோசமாகப் பிரசாரம் செய்யலாமோ அத்தனையையும் கொழும்பிலுள்ள செய்தி ஊடகங்கள் தமது கற்பனைக்கேற்ப செய்து கொள்ளலாம். யாரும் இதைத் தட்டிக் கேட்பதற்கில்லை. இது கொழும்புப் பத்திரிகைகளுக்கு புலி எதிர்ப்புப் பிரசாரத்துக்குரிய சுதந்திரம் என்று நண்பர் பரமசிவம் கையில் இரண்டு ஆங்கிலத் தினசரிகளைப் பிடித்தபடி சொன்னார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக எதையும் தமது விருப்பப்படி கொழும்பு ஊடகங்கள் வெளியிடலாம் என்று எழுதாத விதியொன்று இருப்பதாகவும் அதுவே அவர்களுக்குரிய "புலி எதிர்ப்பு சுதந்திரம்" என்றும் இவற்றைக் கவனித்து வருகிறவர்களுக்கு நன்கு புரியும் என்றேன்.

ஒக்ரோபர் 17ஆந் திகதியிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து "நமது நிருபர்" அனுப்பிய ஒரு செய்தி தி ஐலன்ட் பத்திரிகையின் ஒக்ரோபர் பத்திரிகையின் 20ஆம் திகதி இதழில் 2ஆம் பக்கத்தில் "தமிழர்களுக்கு ஆடை அணிய எல்.ரி.ரி.ஈ. விதிக்கும் விதிமுறைகள்" என்ற தலைப்பில், "இரண்டு பத்தித்தலைப்பில்" ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறது. தமிழ் இளைஞர்களுக்கு ஆடை அணிவதற்கு விடுதலைப்புலிகள் கட்டுப்பாடுகள் விதித்திருப்பதாக யாழ்ப்பாண வட்டாரங்கள் தெரிவித்ததாக இந்தச் செய்தி தெரிவிக்கிறது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஆடைகள் அணிவதற்கான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கும், சுவரொட்டி அறிவிப்புக்கள் விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்டிருப்பதாக இந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இளைஞர்கள் நீளமான முடிவளர்ப்பதற்கும், தாடி வளர்ப்பதற்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இளம் பெண்கள் இறுக்கமான அரைப் பாவாடை, சட்டைகள், களிசான்கள் அணிவது தடை செய்யப்பட்டிருப்பதாகவும், சல்வார்கமிஸ் போன்ற "தமிழ் ஆடைகள்" அணிய வேண்டுமென்று கேட்கப் பட்டிருப்பதாகவும் அந்தச் செய்தி கூறுகிறது. இது மட்டுமல்ல இந்த அறிவிப்பைப் பார்த்து பல்கலைக்கழக மாணவர் ஒருவர் இந்த "ஐலண்ட்" நிருபருக்குக் கருத்துத் தெரிவித்திருக்கிறாராம். இது தலிபான் (ஆப்கானிஸ்தான் மதவாதக் குழு) கோட்பாடுகளை விட மோசம் என்று அந்த மாணவர் தெரிவித்தாராம். தங்களுக்குக் கொடுக்கப்படும் மாணவர் கல்விப்படி புதிய ஆடைகள் வாங்கி அடுக்குவதற்குப் போதாது என்று அவர் கவலை தெரவித்திருக்கிறாராம். "ஆனால் நாங்கள் எப்படி இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது?" என்றும் அந்த மாணவன் கேட்டாராம். சாதாரணமாக இப்படி ஒரு அறிவிப்பு வந்தால் நாங்கள் வீதியிலிறங்கி எதிர்ப்புத் தெரிவிப்போம். ஆனால் இது யாழ்ப்பாணம். எங்களுக்கு இது ஒரு கொலைக்களம் போன்றிருக்கிறது என்று பெண் உரிமைவாதி ஒருவர் சொன்னாராம் என்று அந்தச் செய்தி தெரிவிக்கிறது. இந்தச் செய்தி தி ஐலன்ட் பத்திரிகையில் நேற்றைய இதழில் வெளிவந்தது என்று தெரிவித்த பரமசிவம் "டெயிலி மிறர்" பத்திரிகையின் நேற்றைய இதழின் முதல் பக்கத்தில் வெளிவந்த வேறு ஒரு செய்தியைக் காட்டினார்.

"*எல்.ரி.ரி.ஈயின் தடையால் யாழ்ப்பாணக் கமக்காரருக்குப் பாதிப்பு*" என்று மூன்று பத்தித்தலைப்பில் இந்தச் செய்தி வெளிவந்திருந்தது. யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினருக்கு கமக்காரர் தமது காய்கறிகளை விற்கக் கூடாது என்று எல்.ரி.ரி.ஈ.யினர் விதித்துள்ள தடையினால் கமக்காரர்கள் உடனடியாக இவற்றை விற்றுப் பெறும் ஆதாயத்தை இழந்துள்ளனர் என்று இந்தச் செய்தி கூறுகிறது. கமக்காரர்கள் படையினருக்குக் காய்கறிகள் எதையும் விற்கக்கூடாதென்று யாழ்.குடாநாட்டில் சுவரொட்டிகள் மூலம் எல்.ரி.ரி.ஈயினர்(விடுதலைப்புலிகள்) அறிவித்திருப்பதாகவும் இதை மீறுவோருக்கு மரணதண்டனை கிடைக்குமென அறிவிக்கப் பட்டிருப்பதாகவும், படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக இந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தியில் சுவரொட்டி அறிவித்தலைத் தொடர்ந்து வியாபாரிகள் மூலம் காய்கறிளை விற்பனை செய்த தோட்டக்காரர்கள் உடனடியாகவே நிறுத்திக் கொண்டதாகவும் இந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சில தோட்டக்காரர்கள் தங்களுடைய உற்பத்திப்பொருள்களை மிகக் குறைந்த விலையில் சந்தைகளில் விற்க முயன்றதாகவும், இந்தச் செய்தியில் எழுதப்பட்டிருக்கிறது. சாதாரணமாக உள்ளூர் தோட்டக்கார்களிடமிருந்து நாளொன்றுக்கு மூவாயிரம் தொன்னுக்கும் அதிகமாகக் காய்கறிகளைப் படையினர் வாங்குவார்களென்றும் இவை தவிர கொழும்பிலிருந்து தினமும் பன்னிரண்டாயிரம் தொன்னுக்குமதிகமான காய்கறிகள் இங்கு இறக்குமதி செய்யப்படுகிறதென்றும் இந்தச் செய்தி தெரிவிக்கிறது. கடந்த இரண்டு தினங்களாக யாழ்ப்பாணத்தில் காய்கறி எதையும் கொள்முதல் செய்ய வில்லையென்றும் மேலும் மூவாயிரம் தொன் காய்கறியைக் கொழும்பிலிருந்து இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் சொன்னதாகவும் இந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. புலிகளின் இந்தச் செயல் படையினரைப் பாதிக்காது, தோட்டக்காரரைத்தான் பாதிக்கும் என்று இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கூறியதாகவும், இந்தச் செய்தி தெரிவிக்கிறது. உடன் காய்கறி கிடைக்காததுதான் படையினருக்குள்ள நஷ்டம் என்றும் அவர் சொன்னாராம்".

இந்த இரண்டு கொழும்பு ஆங்கிலத் தினசரிப் பத்திரிகைச் செய்திகளையும் வாசித்துக் காட்டிய நண்பர் பரமசிவம் சிங்களப் பத்திரிகைகள் எப்படியெப்படியெல்லாம் இந்தச் செய்திகளை வெளியிடுகின்றனவோ ஆண்டவ்னுக்குத்தான் வெளிச்சம் என்றார்.

ஆண்டவனுக்கு முதல் சம்பந்தப்பட்ட விடுதலைப்புலிகளிடம் கேட்போம் என்று கிளிநொச்சி தகவல் தொடர்புப் பகுதியுடன் தொடர்புகொண்டு இந்த இரு பத்திரிகைகளின் செய்திகள் பற்றிக் கேட்டேன். "அப்படி எந்தச் சுவரொட்டியோ அறிவிப்போ எதுவும் கிடையாது. இது கொழும்பு ஊடகங்களின் வழமையான புரட்டும் புரளியும் தான் என்று சொன்னார்கள்".

"சங்கரியாரைவிட மிக மோசமான தகவல்தொடர்பாளர்கள் கொழும்புப் பத்திரிகைகளிலிருக்கிறார்கள் போலும். இதையாருக்குச் சொல்லி அழ என்று சொன்னபடி பரமசிவம் நடந்தார். யாழ். அரச அதிபர் மூலமாகவாவது அரசாங்கமும் ஊடகத்துறையும் உண்மையை அறிந்து கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கும் உண்மையறிய விருப்பம் இருக்க வேண்டுமே" என்று சொல்லிவிட்டு புரட்டும் புரளியும் நாட்டைப்பிரிக்கும் என்று போனார்.



மாணவர்களுக்கு பாடசாலையிலோ அல்லது பாடசாலை முடிவடைந்து வீடு வந்த பின்னரோ நூலகங்களை பாவிப்பதற்கும், நூல்களை, பத்திரிகைகளை வாசிப்பதற்கான நேரமின்மையும் காணப்படுகிறது. யாழ்.நகரத்தில் அமைந்துள்ள சில பாட சாலைகளின் நேர அட்டவணையை அவதானித்த பொழுது அதில் நூலகத்தை பயன்படுத்துவதற்கான பாடவேளை ஒரு தடவையோ அல்லது மாதத்துக்கு ஒரு தடவை என்ற விதத்திலேயே இடம் பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

# வாசிப்பு தொடர்பான எமது சமூகப் பார்வையும் அதற்கான சூழல் எதிர் கொள்ளும் சவால்களும்



தனியன் சமூகத்தில் இயக்கம் பெற வும், தொடர்புகளைப் பேணவும், மொழி என்ற ஊடகமே அடிப்படையாக விளங் குகிறது. மொழி -தொடர்பு வழியாக மட்டுமன்றி, அறிவை விருத்திக்கும் தள மாக அமைகின்றது. அந்த வகையில் மொழித்திறன்களில் வாசிப்பும், அதனூ டாக தகவலை பெறுதல் என்பதும் முக்கி யம் பெறுகின்றது. இந்த எண்ண வாக் கத்தை வலியுத்தும் வகையிலும், விழிப் புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடனும் இந்த மாதம் வாசிப்பு மாதமாக கல்விச் சமூகத்தினரும், அரச மட்டத்தாலும் முக்கியப்படுத்தப்பட்டு சிந்திக்கப்படு கின்றது.

வாசிப்பு பற்றியும் எமது சமூகத்தில் வாசிப்புக்கான சூழ்நிலை மற்றும், எதிர் நோக்கும் சவால்கள் பற்றிய கருத்துக்க ளின் தொகுப்பாக இந்தக் கட்டுரை அமை கிறது.

எமது பிரதேசத்தைப் பொறுத்தமட் டில் - பல்வேறுபட்ட அழுத்தங்கள் மற் றும் நேரமின்மை போன்ற காரணத்தால் மாணவர்கள், மத்தியிலோ அல்லது ஆசி ரியர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரை யாளர்கள் மத்தியிலோ வாசிப்பதற்கான நேரச் செலவீனம் மிகக் குறைவாகவே உள்ளது. வாசிப்புச் செயற்பாடு ஒன்றில் வீட்டிலோ அல்லது பொது நூலகம் மற்றும் நிறுவன கட்டுப்பாட்டுக்குள் அமைந்த பாடசாலை, உயர்கல்வி நிறுவனங்களின் நூல் நிலையங்களில் இடம் பெறுவதற் கான சாத்தியங்கள் அதிகமுண்டு.

பொதுவாகப் பாடசாலை மாணவர்க ளுக்கோ, ஆசிரியர்களுக்கோ வாசிப்பதற் கான சந்தர்ப்பம் மிகக் குறைவாக உள்ள மையும், வாசிப்பின் மூலமான கல்வி விருத்தி இடம்பெறாமை, எதிர்காலத்தில் எமது சமூகத்தின் கல்வி மற்றும் தகவலை பெறுவதன் வீதம் குறைவடையவே சாத் தியமுள்ளதாக பல்வேறு தரப்பினரது கருத் தாக முன்வைக்கப்படுகிறது.

பாடசாலை நூலகங்களுக்கோ அல்லது பொது நூலகங்களுக்கோ புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் பொழுது, அதற்குப் பொறுப்பாக உள்ள ஊழியர்கள் பொருத்தமற்ற வகையில் நூல்களை வாங்குவதையும், தரமற்ற நூல்களை வாங்குவதையும் அவதானிக்க முடிகிறது. இந்த நிலை மாற்றப்பட்டு நூலகத்தின் அமைவிடம், அதனை பயன்படுத்துவோரின் சூழ்நிலை என்பற்றைக் கருத்தில் கொண்டு செயற்படுதல் இன்றியமையாததாகிவிடுகிறது.

**எமது பிரதேசத்தில் வாசிப்பதற்கு இடர்பாடாக உள்ளவை.**

பாடசாலைகளில் மாணவர்கள் நூல கங்களில் வாசிப்பதற்கான நூல்கள், மற் றும் அடிப்படை நூலக வசதிகள் அற்ற நிலைமை காணப்படுதல். உதாரணமாக - வடமராட்சி கிழக்குப் பிரதேசப் பாட சாலைகள், தீவகத்தில் உள்ள பாடசாலை களில் இவற்றினை அதிகளவு அவதானிக்க முடிகிறது.

ஆசிரியர்களோ, அதிபர்களோ மாண வர்களை நூலகப் பயன்பாட்டுக்கு அனு மதிப்பதில் ஒழுங்கற்ற தன்மை, வேண்டா வெறுப்பாகச் செயற்படுதல் - இதற்கு பாடத்திட்டத்தை முடித்துவிட வேண் டும் என்ற மேலதிகாரிகளின் அழுத்தம் ஆசிரியர்களுக்கு இருப்பதும் ஒரு காரண மாக அமைகிறது.

மாணவர்களுக்கு பாடசாலையிலோ அல்லது பாடசாலை முடிவடைந்து வீடு வந்த பின்னரோ நூலகங்களை பாவிப்ப தற்கும், நூல்களை, பத்திரிகைகளை வாசிப் பதற்கான நேரமின்மையும் காண்பபடுகி றது. யாழ்.நகரத்தில் அமைந்துள்ள சில பாடசாலைகளின் நேர அட்டவணையை அவதானித்த பொழுது அதில் நூலகத்தை பயன்படுத்துவதற்கான பாடவேளை ஒரு தடவையோ அல்லது மாதத்துக்கு ஒரு தடவை என்ற விதத்திலேயே இடம் பெற் றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

பாடசாலைச் செயற்பாடு முடிவுற்ற பின்னரும், விடுமுறை, வார இறுதி நாட் களிலும் பாடசாலை நேரத்தை ஒத்த வகையில் தனியார் கல்வி நிறுவனங்கள் ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக் கல்வி வரை தொடர்ச்சியாக இடம் பெறுவது டன், ஆரம்பக்கல்வியில் இருந்தே பாட சாலை மாணவர்கள் நேரமற்ற வகையில் வகுப்புக்களை தொடர்வதால் களைப் படைவதும், புத்தகங்களை வாசிப்பதற் கான மனநிலை அற்ற நிலைக்கு தள்ளப் பட்டுள்ளமையும் காணமுடிகிறது.

பல்கலைக்கழக நூலகத்தைப் பொறு த்த மட்டில் அங்கு கல்வி கற்கும் மாண வர் பரீட்சைக் காலங்களிலும், ஆய்வுக் கட்டுரைக்கான அடிக்குறிப்பு பெறுவதற் குமே நூலகத்தை அதிகளவு பயன்படுத் துவதாகவும், ஏனைய நேரங்களில் மூவா யிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் படிக் கும் இடத்தில் 20% வீதமான மாணவர்க ளையே நூலகத்தில் காணக்கூடியதாக உள் ளது. மேலும் பரீட்சை வினாவுக்குரிய விடை களைப் பெறக்கூடிய புத்தகங்களையே குறிப்பிட்ட மாணவர்கள் தேடுவதை யும், அதன் பக்கங்களைப் பிரதி எடுப்ப தையும் அவதானிக்கமுடிகிறது.

நூல்களைப் பணம் கொடுத்து வாங்கி வாசிக்கும் நிலை மிக மிகக் குறைவாகவே உள்ளது. குறிப்பிட்ட துறைசார்பான நூல் களை முன்பு கற்ற மாணவரிடம் இருந் தும், தனக்குத் தேவையானதை மட்டும் பிரதி எடுத்து வைக்கும் நிலையும், இரவல் பெற்றுப் படிக்கும் நிலையும் எழுத்தாளர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துவதாக உள்ளது. குறிப்பிட்ட ஒரு நபர் சாதாரண கல்வி முதல் Master of Education வரை பட்டப் படிப்பு படித்த ஆசிரியர் ஒருவரி டம் குறித்த துறை சார்பான புத்தகங்கள் எத்தனை உள்ளது என்பது கேள்விக்கு றியாகவே உள்ளதை இன்று அதிகளவு காணமுடிகிறது. புத்தகத்தைக் காசு கொடு த்து வாங்கிப் படிக்கும் இரசனை அரி தாகிவிட்ட நிலையேயுள்ளது. வேறு தேவை யற்ற வகையில் பணத்தைச் செலவழிக் கும் இவர்கள், புத்தகம் வாங்குவதை மட் டும் வீண்செலவு என்றே நினைக்கிறார் கள்.

எமது பிரதேசத்தில் 10% நபர்களே ஏதோ ஒரு சஞ்சிகையை சந்தா முறையில் பெற்று வாசிக்கும் பழக்கம் உள்ளவர்க ளாகவும், ஆறு லட்சம் மக்கள் உள்ள எமது பிரதேசத்தில் அண்ணளவாக 40 ஆயிரம் தினசரி பத்திரிகைகளே விற் பனை செய்யப்படுகின்றது. இவற்றினை வைத்துப் பார்கின்ற பொழுது எமது பிர தேசத்தின் வாசிப்பு ஆர்வத்தையும் உணர்ந்து கொள்ளமுடிகிறது.

பாடசாலை நூலகங்களுக்கோ அல் லது பொது நூலகங்களுக்கோ புத்தகங்க ளைக் கொள்வனவு செய்யும் பொழுது, அதற்குப் பொறுப்பாக உள்ள ஊழியர் கள் பொருத்தமற்ற வகையில் நூல்களை வாங்குவதையும், தரமற்ற நூல்களை வாங்கு வதையும் அவதானிக்க முடிகிறது. இந்த நிலை மாற்றப்பட்டு நூலகத்தின் அமை விடம், அதனை பயன்படுத்துவோரின் சூழ் நிலை என்பற்றைக் கருத்தில் கொண்டு செயற்படுதல் இன்றியமையாததாகி விடு கிறது.

எமது பிரதேசத்தில் அண்மையில் ஏற் பட்ட சமாதான காலத்துக்குப் பின்னர் மின்சார வசதி ஏற்பட்டு தொலைக் காட் சியின் பாவனை அதிகரித்தமையால் சிறு வர், பெரியவர் மட்டுமன்றி எல்லோருமே நேரமற்றவர்களாகவும் சமைப்பதற்குக் கூட நேரமில்லாமல், கடையில் பார்சல் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு சின்னத் திரை நாடகங்களைத் தொடர்ச்சியாக பார்ப் பதைக் காணக் கூடியதாகவுள்ளது. இதனால் கல்வியின் அடைவு மட்டம், நூல் களை வாசிப்பதற்கான நேரம், விளையாடு வதற்கான நேரம் என்வற்றைக் கேள்விக் குறியாக்கிவிட்டது என்றே கூறலாம்.

நூலகம் தொடர்பான அறிவியல் தன்மை, அவற்றின் நடைமுறை பற்றிய விளக்க மின்மை, நூலகப் பயன்பாட்டுக்கு பெரும் தடை யாகவுள்ளது. கடந்த இரண்டு மூன்று வரு டங்களுக்குள்ளேயே தேசிய கல்வியியற் கல்லூரியிலும், யாழ். பல்கலைக் கழகத் திலும் நூலகம் தொடர்பான விஞ்ஞான ரீதியி லான கற்கைகள் அறி முகம் செய்யப்பட் டுள்ளன. இதனால் இது வரைகாலமும் நூல கத்தில் பணியாற்றும் நூலகரோ அல்லது பணியாட்களோ நூல கத்தை முகாமை செய் யும்செயற்பாட்டில் திரு ப்தியற்ற நிலையிலேயே செயற்படக் காரணமாக அமைந்துள்ளது.



நூலகக் கற்கை அறி முகம் செய்யப்பட்டுள் ளதால் இனிவரும் கால ங்களில் நூலகத்தை நல்ல முறையில் முகாமை செய்யவும், இலகு வாக வாசகர் நூல்க ளைப் பெறுவதற்கான வழிமுறைகள் உருவா கவும் சாத்தியமுள்ளது எனக் குறிப்பிடமுடியும்.

வாசகர்களுக்கும், நூலகத்தில் பணி யாற்றும் பணியாட்களுக்கும் இடையி லான உறவு சுமுக மற்றதாக அமையும் பொழுது நூலகத்தை வாசகர்கள் பயன் படுத்தும் நிலை குறைவடைகிறது. வாசக ரின் நிலை அறிந்தும், அவர் தேடும் நூலை இலகுவாகப் பெறுவதற்கும் நூலகர் உதவி புரியவேண்டும். இதைவிட்டு சில நூலகங்களில் பணியாளர்கள் கதிரையி லேயே தொடர்ச்சியாக அமர்ந்திருந்து பணியாற்றுவதை அவதானிக்க முடிகி றது. சில வேளைகளில் வாசகர் ஒரு புத் தகத்தை தேடுவதிலேயே அதிக நேரத்தைச் செலவழித்துக் களைத்து விடுவதைக் காண முடிகிறது.

நூலகங்கள் ஊடாக, அந்தப் பிரதேச மக்கள் பயன்பெறுவதை நோக்காகக் கொண்டமைகின்ற பொழுதும், பொது நூலகம் என்ற சொல்லுக்கே அர்த்தமற்ற தாகி அங்கு ஒரு வாசகர் செலுத்த வேண் டிய பணமோ மிக அதிகமாக இருப்ப தால் குறித்த நூலகத்தில் அங்கத்துவம் பெறுவதற்கோ, அல்லது நூலை இரவல் பெறுவதற்கோ வசதியற்ற நிலை இன்றும் எமது பிரதேசத்தில் உள்ளது. இதனால் வறிய பிள்ளைகள் நூல்களை வாசிக்க விருப் பம் இருந்தும், அந்த வாய்ப்பினைப் பெற முடியாத நிலைக்கு தள்ளப்படுகிற நில மையைக் காணமுடிகிறது.

பொது நூலகங்களிலோ அல்லது பாட சாலை நூலகங்களிலோ பராமரிப்பு எந்தளவுக்கு பேணப்படுகிறது என்பது கேள்விக்குறியாக உள்ளது. சில நூலகங் களில் நூல்கள் தூசு தட்டப்படாமல் நீண்ட நாட்களாக இருப்பதையும் காணமுடி கின்றது. எலிகளின் அட்டகாசத்தைக் கூடக் கவனியாமல், பணிபுரியும் நூலக பணியாளர்களை இன்றும் காணமுடிகி றது. இது நூலக வாசிப்பின் கவின் நிலையை பாதிப்பதாகவே அமைகிறது.

நூலகங்களின் கவின் நிலை அதாவது, சூழல் வாசகர்களுக்கு இடர்களைக் கொடுப்பதாக உள்ளது. குறிப்பாக சத்தம் உள்ளதாகவும், வியர்வையை ஏற்படுத்து வதாகவும், காற்றோட்டம் அற்ற இடமாக உள்ளதாலும் வாசிப்புக்கான சூழ்நிலை குழப்பமடைகிறது. இவற்றில் நூலகப் பரா மரிப்பாளர்கள் முக்கியம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறான எமது பிரதேசத்தை பொறு த்தமட்டில், மேற்கூறப்பட்ட வகையில் பல்வேறு சவால்கள் - நூலகமும், அதன் வழியிலான வாசிப்பு விருத்தி என்ற செயற் பாட்டில் செல்வாக்கு செலுத்தும் கார ணிகளாக உள்ளதை இனங்காண்டு கொள்ள முடிகிறது. இவற்றினை வாசகர்களுக்கு சார்பான வகையில் மாற்றியமைக்கின்ற பொழுது, வாசகர்கள் தாம் தினமும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற சுய ஊக்கமும் கட்டி யெழுப்புகின்ற பொழுதே எமது பிரதேச வாசிப்பு அதனூடாக கல்வி மற் றும் தகவலை பெறும் திறன்கள் மேம் பாடு அடைய வாய்ப்பு உண்டாகும்.

**ப.இராஜேஸ்வரன்**

---

**நினைவுக்கவிதை... சி.மார்க்கண்டு.**

அமைதி காக்கவென இங்கு வந்த இந்திய ஆக்கிரமிப்புப் படையினர், தமிழ் மக்களுக்கு எதிரான போர் நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்தி, அதன் ஒரு அங்கமாக 1987 ஐப்பசித் திங்கள் 21 ஆம் நாள் யாழ். அரசினர் போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் நுழைந்து ஒன்றுமறியாதவர்களாக வைத்தியப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வைத்திய கலாநிதிகளிலிருந்து ஊழியர் வரையான 21 பேரைத் தமது துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கிக் கோரத்தாண்டவம் புரிந்த துன்பியல் நிகழ்வின் 18 ஆவது ஆண்டு கடந்த நிலையில்... இன்று...

## ஆண்டுகள் தோறும் அழுகின்றோம்

அன்புக்குரியர்வர்களே!

எதிர்பாராத மரணங்கள்...
எதேச்சையான உயிரெடுப்புக்கள்...
காரணமில்லாத காரியங்கள்...
இவற்றில் தான்
உங்கள் சரித்திரம் அடங்கிவிட்டது.
வரலாறு படைக்காத
உங்கள் மரணங்கள்
வரலாறு ஒன்றினுள் அடங்கியுள்ளன.
யாருக்கும் தீங்கிழைக்காத...
எவரையும் இம்சிக்காத...
எல்லோருக்கும் உதவியாக
இருந்த நீங்கள்...
ஏன் உங்களை இழந்தீர்கள்?
தேசத்திற்காகவா?...
இனத்திற்காகவா?...
மொழிக்காகவா?...
இல்லையெனில்
உங்களுக்காகவேனுமா?
ஒன்றுக்குமே இல்லையென்றால்
உங்கள் மரணங்கள்
எதனுள் அடங்கும்?
எதனுள்ளும் அடங்காதெனின்
அடக்கப்படும் ஒன்றினுள் அல்லவா



இதுவும் அடங்கும்.
அப்படித்தானே...
அதனால் தான்
ஆண்டுதோறும் அழுகின்றோம்
கண்ணீர்க் கடல் பெருக.
உங்களுக்கான எமது கண்ணீர்
வெறுமையான சம்பிரதாயமாக -
சடங்காக
ஆகிவிடக் கூடாது.
உறுதி ஒன்றைத் தெரிவுசெய்யும்
உரைகல் ஆகட்டும் அவை.
மாலைகள் சூட்டி, தீபமேற்றி
மனங்கள் கரைந்து
நாங்கள் ஆற்றும்
உங்களுக்கான அஞ்சலிகள் -
மனமிரங்கிய -
மனிதாபிமானமுள்ள
சேவைகளின் மூலம் செறியட்டும்.
அதில்...
பறித்தெடுக்கப்பட்ட
உங்கள் உள்ளங்கள்
நிரந்தர சமாதானம் அடையட்டும்.

இன்றும் உங்கள் நினைவாக...
கண்ணீர்த் துளிகள் கரைகின்றன.

# கியூபா, மெக்சிக்கோ நாடுகளை அச்சுறுத்தும் 'வில்மா' புயல் அமெரிக்காவையும் தாக்கலாம்!

## மக்கள் பாதுகாப்பான இடம்தேடி வெளியேற்றம்



வொஷிங்ரன்

அமெரிக்காவுக்கு அருகே உருவாகியுள்ள வில்மா புயல், ஹெத்தி தீவில் 10 பேரின் உயிரைப் பலிகொண்டுவிட்டு, கியூபா, மெக்சிக்கோ நாடுகளையும் மிரட்டி வருகிறது.

அமெரிக்கவை அண்மையில்தான் அடுத்தடுத்து கத்ரீனா, ரீட்டா புயல்கள் தாக்கி பேரழிவை ஏற்படுத்தின. அடுத்து ஒரு புயல் உருவாகியுள்ளது. அதற்கு வில்மா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இது ஹெத்திதீவை முதலில் தாக்கியது. அதனால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர்.

பின்னர் அது வலுவடைந்து கியூபா நாட்டை நோக்கி நகர்கிறது. கியூபாவின் மேற்குக்கரை, மெக்சிக்கோ யுகாடான் தீபகற்பப் பகுதியை அது தாக்கலாம் என்று தெரிகிறது.

அது மிக ஆபத்தான 4 ஆவது ரக புயலாக உருவெடுத்துள்ளது. மெக்சிக்கோவின் கோசுமெல் நகருக்கு அருகே 655 கிலோமீற்றர் தொலைவில் மையம்கொண்டுள்ளது.

கரீபியன் கடல் வெப்பம் அடைந்ததைத் தொடர்ந்து உருவான 21 ஆவது புயல் இதுவாகும். இது மணிக்கு 13 கிலோமீற்றர் வேகத்தில் மேற்கு, வடமேற்குத் திசைகளில் நகர்கிறது. அது அமெரிக்காவின் நியூ ஓர்லியன்ஸ் நகரையோ, மிசிசிப்பியையோ தாக்காது. அங்கு ஏற்கனவே, கத்ரீனா புயலுக்கு ஆயிரத்து 200 பேர் உயிரிழந்தனர்.

வில்மா புயல் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தைத் தாக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜமேக்கா, ஹொண்டூரஸ், நிகரகுவா ஆகிய நாடுகளையும் அது தாக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹொண்டூரஸ் நாட்டில், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் 10 ஆயிரம் பேரை அங்கிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கியூபாவின் கிழக்குக்கரைப் பகுதியில் பலத்த மழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்தது. இதனால் 5 ஆயிரம் பேர் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.



புளோரிடா அருகேயுள்ள கையஸ் தீவிலிருந்து 80 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். சுற்றுலாப் பயணிகளை உடனடியாக வெளியேறுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

## பெருவின் முன்னாள் ஜனாதிபதி நீதிமன்றால் விடுதலை!

லிமா

தென்னமெரிக்காவிலுள்ள பெரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பியூஜிமோரி, இவர் 5 ஆண்டுகளுக்கு முன்பு அதிபராக இருந்தபோதே, நாட்டைவிட்டு ஜப்பானுக்கு ஓடிவிட்டார். அவர்மீது 21 குற்றவியல் வழக்குகள் உள்ளன.

இவற்றில், இராணுவத்துக்கு ஹெலிகொப்ரர், வாகனங்கள் வாங்கியதில் பனாமா கம்பெனிக்கு ஆதரவாக நடந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரம் ஏதும் இல்லை என்று கூறி உயர்நீதிமன்றம் அவரை விடுவித்தது.

இதைத் தொடர்ந்து விரைவில் நாடு திரும்பி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவேன் என பியூஜி மேரி தெரிவித்துள்ளார்.

பெரு மண்ணை மிதித்ததும், அவரைக் கைது செய்வோம் என்றும் ஆட்சியாளர்கள் கூறியுள்ளனர்.

காளிகோயிலடி சனசமூக நிலையம்
62 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தும்
மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கல்வியங்காடு G.P.S. மைதானத்தில் நடைபெறும் மேற்படி சுற்றுப் போட்டியில் 6 பேர் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக அமைந்திருக்கும். இந்தப் போட்டியில் பங்குகொள்ள விரும்பும் அணிகள் பின்வரும் முகவரியிலுள்ள நிறுவனங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பிரசாத் தொலைத்தொடர்பகம் திருநெல்வேலிச் சந்தி
அம்பாள் ஸ்ரோர்ஸ் திருநெல்வேலி, பத்திரகாளி கோவில் முன்பாக
முடிவுதிகதி : 26.10.2005

## மார்பகப் புற்றுநோயால் பிரதமர் மனைவி மரணம்!



மலேஷிய பிரதமர் அப்துல்லா அகமட் படாவி (வயது 65) இவரது மனைவி எண்டான் முகமட் மலேஷிய மக்களால் மிகவும் நேசிக்கப்பட்டவர்.

கடந்த 2 வருடங்களாக இவர் மார்பகப் புற்று நோயால் அவதிப்பட்டு வந்த இந்த முதல் பெண்மணி அடிக்கடி அமெரிக்கா சென்று புற்று நோய்க்கு சிகிச்சை பெற்றுவந்தார். இந்த நிலையில் எண்டான் முகமட் நேற்றுக்காலை மரணமடைந்தார்.

## பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை செயற்கைக்கோள் மூலம் படமெடுக்க பாகிஸ்தான் அரசு தடை விதித்தது!

இஸ்லாமாபாத்

பாகிஸ்தானில் கடந்த 8 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பம் பேரழிவை ஏற்படுத்தியது. 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இதில் பலியாகிவிட்டனர். பாகிஸ்தானின் காஷ்மீர் பகுதியிலுள்ள முசாபராபாத் உட்பட பல பகுதிகள் இன்னும் துண்டிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன.

செயற்கைக்கோள் மூலம் பெறப்பட்ட படங்களை வைத்து பூகம்பம் பாதித்த பகுதிகளை அடையாளம் கண்டு மீட்புப் படையினர் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இந்த நிலையில் தற்போது செயற்கைக்கோள் உதவியுடன் பூகம்ப பகுதிகளைப் படம்பிடிக்கவேண்டாம். அந்தப் படங்களை இணையத்தளத்தில் வெளியிடவேண்டாம் என்று இராணுவத்துக்கும் மீட்புப் படையினருக்கும் பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது.

பூகம்பம் பாதித்த பகுதிகளின் படங்களை இணையத்தளத்தில் வெளியிடுவது பாதுகாப்புக்கு உகந்ததாக இல்லை என்றும் பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது. எனவே, செயற்கைக்கோள் உதவியுடன் மீட்புப் பணிகளை மேற்கொள்ளும் திட்டத்தைப் பாகிஸ்தான் வாபஸ் பெற்றுவிட்டது.

பூகம்பம் பாதித்தவர்களைத் தற்காலிகமாக குடியமர்த்த போதிய கூடாரங்கள் கிடைக்கவில்லை. பாகிஸ்தானில் மட்டுமன்றி இந்தியாவின் காஷ்மீர் பகுதியிலும் பூகம்பம் பாதித்தவர்களுக்கு கூடாரங்கள் அமைத்துக் கொடுக்க போதிய கூடாரங்கள் இல்லை.

இதற்காக சீனா மற்றும் நெதர்லாந்து நாடுகள் இந்தியாவின் பூகம்ப பகுதிகளுக்கு கூடாரங்களை அனுப்பி வைக்கின்றன.

நேபாள நாட்டிலும் பூகம்பம் விரைவில் தாக்கும் என்ற பீதி பரவி வருகின்றது. இதைத் தொடர்ந்து பூகம்பத்தில் இருந்து தங்களைக் காத்துக் கொள்ளும் விஷேட கருவிகள் நேபாளத்தில் விற்பனைக்கு வந்துள்ளன. இவை அங்கு அமோக விற்பனை ஆகின்றன.

IOM International Organization for Migration
IOM நிறுவனம் யாழ்ப்பாணம்

கேள்விப் பத்திரம் கோரல்

எமது நிறுவனம் 300 சதுர அடி பரப்பளவைக் கொண்ட 700 தற்காலிக வீடுகளை அச்சுவேலி, கற்கோவளம் ஆகிய இடங்களில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. வேலைக்குத் தேவையான மூலப்பொருட்கள் யாவும் எமது நிறுவனத்தால் வழங்கப்படும். மேற்படி வீடுகளை அமைப்பதில் ஆர்வமுள்ள, தேர்ச்சி பெற்ற, பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. இவ்விண்ணப்பங்கள் யாவும் சுயவிலாசமிடப்பட்ட விபரங்களுடன் இம்மாதம் 27, 28, - 10 - 2005 திகதிகளில் முற்பகல் 09.30 - 01.00 மணி வரையில் நேரில் வந்து கையளிக்கவும். அத்துடன் மாதிரி வீட்டு வரைபடம் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள், ஆலோசனைகளை எமது அலுவலகத்தில் மேற்குறித்த தினங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைமைப் பொறுப்பதிகாரி
IOM நிறுவனம்
70, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (2092)

IOM International Organization for Migration
IOM நிறுவனம் யாழ்ப்பாணம்
மீளமைப்புத் திட்டத்துக்கான
களஞ்சியப் பாதுகாப்பு
உத்தியோகத்தர்கள்
பதவி வெற்றிடம் (தற்காலிகம்)

இடம்:அச்சுவேலி, பருத்தித்துறை.

மேற்குறிப்பிட்ட இடங்களிலுள்ள எமது களஞ்சியங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாகக் கடமையாற்று வதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வேண்டப்படும் தகைமைகள்:
◆ க.பொ.த. (சா.த.) வரை கற்றிருத்தல் வேண்டும்.
◆ வயதெல்லை 21 - 55 வரை
◆ சிறந்த தேக ஆரோக்கியம் அவசியம்
◆ முன் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது

விண்ணப்பங்கள் அனைத்தையும் 27-10-2005 க்கு முன்னர் கிடைக்கத் தக்க வகையில் சுய விபரங்களுடன் கீழ் வரும் முகவரியில் தபால் மூலமோ அல்லது நேரிலோ ஒப்படைக்கவும்.
கோப்பாய், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தகுதியான விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

தலைமைப் பொறுப்பதிகாரி,
IOM நிறுவனம்,
70, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (2092)

Swiss Labour Assistance
solidar
An INGO consortium including NPA, SAH and ASB

கூறுவிலை கோரல்

செம்பியன் பற்று வடக்கிலேயோ அல்லது வத்திராயனிலேயோ (வடமராட்சி கிழக்கு) சுனாமியால் அழிக்கப்பட்ட வீடுகளை மீளப் புனரமைத்தல்.

ஏ.எஸ்.பி., என்.பி.ஏ மற்றும் எஸ்.ஏ.எச் ஆகிய சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமாகிய சொலிடாரினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செம்பியன் பற்று வடக்கிலும், வத்திராயனிலும் சேதமாக்கப்பட்ட வீடுகளை மீண்டும் புனரமைப்பதற்காக சீல்வைக்கப்பட்ட கூறுவிலைப் பத்திரங்களை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறீர்கள். பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் 20 தொடக்கம் 50 வீடுகள் தத்தமது தராதரத்துக்கும், தகுதிக்கும் ஏற்றவாறு கட்ட விரும்புவோரை இதில் பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். ஒப்பந்தக்காரர்கள் கூறுவிலைப் பத்திரங்களையும், சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் கீழ்காணும் முகவரியில் ரூபா 3000/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி கூறுவிலை விண்ணப்பப் படிவங்களும், ஆவணங்களும் 20.10.2005 திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளவேண்டும்.

Solidar/ ASB Construction Office,
160 Mile Post,
Farm Point,
A9 Road,
Paranthan.
தொலைபேசி - 021 228 5147 (C/4757)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# சிறுவர் இல்லத்தில் பாலியல் துஷ்பிரயோகம்; சந்தேகத்தில் இருவர் பொலிஸாரால் கைது!

கொழும்பு

ஆனைக்கோட்டையிலுள்ள சிறுவர் இல்லமொன்றில் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகவும், சிறுவர்களைக் கடுமையாகத் தண்டித்ததாகவும் தெரிவித்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவர் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

ஆனைக் கோட்டை - கூழாவடிப் பகுதியில் இயங்கி வந்த குறித்த சிறுவர் இல்லத்தில் சிறுவர்கள் பலர் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தச் சிறுவர்களை இளம் பெண் ஒருவருடன் தற்போது கைது செய்யப்பட்ட இருவரும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகவும் சிறுவர்களைத் துன்புறுத்துவதாகவும் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், 21 வயது இளைஞன் ஒருவரையும், 45 வயது குடும்பஸ்தர் ஒருவரையும் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது இவர்கள் இருவரையும் இரண்டு வார காலம் மேலதிக விசாரணைக்காகத் தடுத்து வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை - சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தியதாக சந்தேகிக்கப்படும் பிரதான நபரான மேற்படி பெண்ணைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சார்ள்ஸ் விஜேவர்த்தன கொலை வழக்கு: சந்தேக நபரின் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு

யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வீரபாண்டியன் கோபியைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிபதி குசல சரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது அறிக்கையொன்றைச் சமர்ப்பித்த பொலிஸார் அடையாள அணிவகுப்பு தொடர்பான அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும், அவரின் ஆலோசனை கிடைத்தவுடன் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் தெரிவித்தனர்.

சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள வீரபாண்டியன் கோபி எனப்படும் கதிரமலை வைதீகன் பாதுகாப்புக் காரணங்களுக்காக நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் சென்று சந்தேக நபரின் நிலைமையை ஆராய்ந்த நீதிபதி சந்தேக நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தவிட்டார்.

அத்துடன் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று எடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு அவர் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## அமெரிக்க ...

22 ஆவது படைப்பிரிவின் அதிகாரி மேஜர் ஜெனரல் சுமித் பால சூரியா, கிழக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொகான் அபே வர்த்தன மற்றும் படை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் தமது காவலரண்கள் மீது அடிக்கடி நடத்தப்படுகின்ற தாக்குதல்கள் குறித்து அமெரிக்கத் தூதுவரிடம் எடுத்துக் கூறியுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இதையடுத்து திருமலை மாவட்ட கண்காணிப்புக்குழு அலுவலகத்தில், கண்காணிப்புக்குழு பொறுப்பதிகாரி ஓதர் ரிவீற்றன் மற்றும் உறுப்பினர்களுடன், மாவட்டத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் கலந்துரையாடியதாக கண்காணிப்புக்குழுத் தகவல்கள் தெரிவித்தன.

## பஹ்ரெய்னில்...

அனுமதிக்கப்பட்ட அவர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

சிவகுமாரின் பெற்றோர்களும் இரு சகோதரிகளும் யாழ்ப்பாணத்தில் உள்ளனர். அவர்களுக்கு சிவகுமார் உயிரிழந்த தகவலை அவர்களது குடும்ப நண்பரான ஜெயினாப் முகமட் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து டெல்மான் நிறுவனம் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டது.

## யாழ்ப்பாண...

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மரணமடைந்த பெண்ணின் உடலையும் அவரது பிள்ளையையும் வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், சந்தேகத்தின் பேரில் மேற்படி பெண்ணின் கணவரான செல்வக்குமாரைக் கைதுசெய்துமுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் தெல்லிப்பளை வடக்கைச் சேர்ந்தவர் என்றும் கொலைசெய்யப்பட்ட பெண் வலி. மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

## போர் நிறுத்த மீறல்...

வவுனியாவிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வீழ்ந்த இந்த விமான் தீப்பற்றி எரிந்ததாகத் தகவல் கிடைத்துள்ளது.

விமானப்படைத் தளத்திலிருந்து பயிற்சிப் பயணம் ஒன்றை மேற்கொண்டவேளை இந்த விமானத்தின் இயந்திரம் மற்றும் இலத்திரனியல் கட்டமைப்பு செயலிழந்ததையடுத்து விமானப்படைத் தளத்தினூடான தொடர்பு துண்டிக்கப்பட்ட பின்னரே விமானம் வீழ்ந்துள்ளது.

ஒரு லட்சம் டொலர் பெறுமதி கொண்ட இந்த விமானத்தை மீட்பதற்கான சாத்தியம் எதுவும் இல்லையெனவும், இந்த விமானம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விஷேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த விமானம் விபத்துக்குள்ளான காரணத்தைக் கண்டறிய இந்த விமானத் தயாரிப்பு நிறுவனத்தின் நிபுணர்களின் உதவி நாடப்படவுள்ளதாக விமானப் படைப் பேச்சாளர் அஜந்த டி சில்வா தெரிவித்தார்.

இது குறித்து ஏற்கனவே அவர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தமிழ் மாணவர்களின்....

மாணவர்களை அழைத்து அதிபரின் சவப்பெட்டியை தாருங்கள் நாங்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்துக்கு முன் வைத்து ஆர்ப்பாட்டம் செய்யப்போகிறோம் எனக்கேட்டனர்.

கல்விமான்களின் கொலையைக் கண்டித்து மாணவர்களின் பகிஷ்கரிப்பினை முடிவுக்குக் கொண்டு வந்த மாணவர்கள் தங்கள் கல்விச் செயற்பாடுகளை தொடருவதற்காக நேற்று முன்தினம் பாடசாலைக்கு வருகை தந்தனர்.

ஆனால், ஈ.பி.டி.பியினர் மாணவர்களிடம் தொடர்ந்தும் பகிஷ்கரிப்புப் போராட்டம் செய்யும்படி மிரட்டியதோடு, பகிஷ்கரிப்பை மேற்கொள்ளும்படி துண்டுப் பிரசுரங்களை பாடசாலைகளுக்கு விநியோகித்தனர்.

நேற்று முன்தினமிரவு யாழ். மத்தியகல்லூரி சமூகம் என்ற பெயரினைப் பொறித்து மாணவர்களை பகிஷ்கரிக்கக் கோரும் துண்டுப் பிரசுரம் ஒன்றை நகரப் பாடசாலைகளுக்கு முன்பாக இரவு வேளையில் ஒட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். நேற்று மத்திய கல்லூரிக்கு முன்பாக ஒட்டோவில் வந்த இராணுவத்தினர் பகிஷ்கரிப்பைத் தொடரும்படி மாணவர்களிடம் கேட்டுக்கொண்டனர். மாணவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தங்கள் கல்விச் செயற்பாடுகளை தொடர்ந்தனர்.

தேசவிடுதலைக்கான பலமான தூணாக விளங்கும் மத்திய கல்லூரியையும், கல்லூரி மாணவர்களையும் தேசவிரோதிகள் தவறான பிரசாரத்துக்கு பயன்படுத்துவதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

இதுவரை நடந்த எந்தச் சம்பவங்களுக்கும் மாணவர்களுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை. எம்மால் அரசியல் இலாபம் தேடுவதற்காக தேசவிரோதிகள் தொடர்ந்து முயற்சித்தால் கடும் விளைவுகள் ஏற்படும் என எச்சரிக்கிறோம்.

தொடர்ந்தும் எமது மாணவர்கள் தேசவிடுதலைக்கான தங்கள் பயணத்தினை தொடர்வார்கள். பாடசாலைச் செயற்பாடுகள் வழமைபோல் தொடர்ந்தும் நடைபெறும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்சாரம் தாக்கி ஆசிரியர் உயிரிழப்பு!

திருகோணமலை

திருகோணமலையில் மின்சாரம் தாக்கி ஆசிரியர் ஒருவர் உயிரிழந்ததாக திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை சேவைக்கால பயிற்சி ஆசிரியர் சிவலிங்கம் ராஜலிங்கம் என்பவரே உயிரிழந்தவராவார்.

தனது பிள்ளையை பாடசாலையல் விடுவதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டபோது வீட்டின் முன்னால் விழுந்துகிடந்த மின்கம்பியில் காணப்பட்ட மின் ஒழுக்கில் சிக்கி இவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அக்கரைப்பற்றில் ஒருவர் சுட்டுக்கொலை!

கல்முனை

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் நேற்றுமுன்தினம் இரவு காசிம் என அழைக்கப்படும் மீரா லெப்பை மொகமது ஹனீபா (வயது 42) என்பவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அட்டாளைச்சேனையைச் சேர்ந்த இவர் சில மாதங்களுக்கு முன்னரே மத்திய கிழக்கிலிருந்து நாடுதிரும்பியிருந்தார்.

தனது நண்பர் ஒருவரை அக்கரைப்பற்றிலுள்ள வைத்தியர் ஒருவரின் வீட்டுக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றபோது வைத்தியரின் வீட்டு வளவினுள் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தக் கொலையானது அரசியல் பின்னணியுடன் தொடர்புடையதாக இருக்கலாம் அல்லது முஸ்லிம் ஆயுதக்குழு சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

## மகிந்தவுக்காக..

நேற்றுக் காலை யாழ்.நகரில் அமைந்துள்ள ஈ.பி.டி.பியினரின் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்ட தொண்டராசிரியர்களை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்-தேர்தல் தினத்தன்று அவருக்கே வாக்களிக்குமாறும் கூறியதோடு தேர்தல் நடைபெறும் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முதல் நாள் தம்மை அலுவலகத்தில் வந்து சந்திக்குமாறும் கூறியுள்ளனர்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னரே தொண்டராசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படுமெனவும் தெரிவித்துள்ளனர்.

## போர்நிறுத்தத்தை...

இந்தப் பகுதி கண்ணிவெடிகள் நிறைந்த பிரதேசமாகும்.

இந்த விமானத்தைத் தேடி நேற்றுமாலை படையினரின் உலங்கு வானூர்தி ஒன்றும் எமது அனுமதியின்றி கனகராயன்குளம் பகுதியில் பறப்பினை மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு செயற்பாடுகளின் மூலமாக படையினர் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளனர் என ஞானம் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்தார்.

இதே வேளை -

விமானம் விழுந்ததாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்று சென்று பார்வையிட்டுள்ளனர்.

# கொழும்பு விடுதியிலிருந்த பெண்மீது ஐந்து படையினர் பாலியல் வல்லுறவு!

கொழும்பு

இரண்டு நாட்களுக்கு முன்னர் கொழும்பு - மருதானையில் விடுதியொன்றில் தங்கியிருந்த பெண் ஒருவர் ஐந்து படையினரால் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பிட்ட படையினர் ஐவரையும் பின்னர் இராணுவ பொலிஸார் கைதுசெய்தனர். பாதிக்கப்பட்ட பெண்ணின் முறைப்பாட்டைத் தொடர்ந்து முக்கிய சந்தேக நபரை மருதானைப் பொலிஸார் கைதுசெய்தனர். ஏனைய நால்வரும் நாரஹேன்பிட்டி இராணுவ முகாமொன்றில் வைத்து இராணுவப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இராணுவப்பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நால்வரும், இன்னும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மருதானை பிரதான வீதியொன்றிலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த வேளை இந்தப் பெண்ணை விசாரணைக்கென முச்சக்கரவண்டி ஒன்றில்வேறோர் இடத்திற்கு கடத்திச்சென்று தனது சகபடையினருடன் சேர்ந்து இவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக மருதானை பொலிஸார் தெரிவித்துள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்ணைப் பற்றிய விபரங்கள் எதனையும் பொலிஸார் தெரிவிக்கவில்லை.

# பிரதான வேட்பாளர்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது!

கொழும்பு

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு மேலதிக பாதுகாப்பை வழங்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உயர் மட்டப் பொலிஸ் குழு பரிந்துரை செய்ததையடுத்து-

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு மேலதிக பாதுகாப்பும், வாகனங்களும் ஜனாதிபதியின் பணிப்புரையின்பேரில் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவிலிருந்தும், அனுபவம் வாய்ந்த மற்றும் பயிற்றுவிக்கப்பட்ட அதிகாரிகளும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த விடயம் தொடர்பாக பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தனிப்பட்ட ரீதியில் தொடர்பு கொண்டு தெரிவித்தார் எனத் தெரியவருகிறது.

# தேர்தல் பாதுகாப்புக்கு 55 மோப்ப நாய்கள்!

கொழும்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்புக்காக 55 ஜேர்மன் மோப்ப நாய்களை அரசாங்கம் இறக்குமதி செய்துள்ளதாக கண்டி பொலிஸ் பொறுப்பதிகாரி லால் செனவிரட்ன தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது -

வெடிகுண்டுகளை மோப்பம் பிடித்துக் கண்டறியும் பயிற்சி பெற்ற 55 நாய்களை ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். இந்த நாய்கள் பெல்ஜியம் மலோன் இனங்களைச் சேர்ந்தவை.

ஜனாதிபதித் தேர்தலில் பரப்புரைக் கூட்டங்களை நடத்தும் இரு பிரதான வேட்பாளர்களின் அனைத்துக் கூட்டங்களுக்கும் இந்த நாய்கள் கொண்டு செல்லப்படும். சிறப்பு வாகனங்களில் ஒவ்வொரு இடத்துக்கும் ஏற்றிச் செல்லப்படும் இந்த நாய்களுக்கு பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் ஏற்பாடு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

# இராணுவ ட்ரக் மோதி மாணவன் காயம்!

யாழ்ப்பாணம்

இராணுவ வாகனம் மோதியதில் பாடசாலை மாணவன் ஒருவன் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவத்தில் வசாவிளான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் றஜீவன் (வயது 7) என்ற மாணவனே காயமடைந்தவராவார்.

நேற்று நண்பகல் பாடசாலைக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையே இவர் மீது இராணுவ வாகனம் மோதியதாகக் கூறப்படுகிறது.

# மரண அறிவித்தல்

## ஆனந்தகிருஸ்ணர் ஸ்ரீபாஸ்கரன்

வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாவும் கொண்ட ஆனந்தகிருஸ்ணர் ஸ்ரீபாஸ்கரன் அவர்கள் 20-10-2005 வியாழக்கிழமை காலமனார்.

அன்னார் ஆனந்தகிருஸ்ணர் இராஜலக்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், ஸ்ரீரஞ்சினி, ஸ்ரீதரன், ஸ்ரீவதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவபாலன், சுகந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிரோஜன், லாவண்யா ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜித், சில்பா ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21-10-2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வியாபாரி மூலையில் அமைந்துள்ள அவரது வீட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வியாபாரிமூலை,*
*பருத்தித்துறை.*

தகவல்
**குடும்பத்தினர்**

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.